வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 12.10.2023 வியாழக்கிழமை | இதழ் : 306 | பக்கங்கள் : 16




# மோடியை சந்திப்பதற்கு தமிழ்க் கட்சிகள் முயற்சி

## விக்னேஸ்வரன் வீட்டில் கூடி ஆராய்வு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தமிழ் மக்களின் நிலைகள் குறித்து தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்கு தமிழ் தேசிய கட்சிகளைச் சேர்ந்த ஏழு கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றினை அனுப்பத் தயாராக உள்ளோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

11



## ஜனாதிபதியை நேற்று சந்தித்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

### இரு ஒப்பந்தங்களும் கைச்சாத்து

கொழும்பு, ஒக். 12

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்திய - இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பான இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன்,

11

## வெளிநாடுகளின் மேற்பார்வையிலேயே ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை!

### கத்தோலிக்க திருச்சபை மீள வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பியுள்ள புதிய கடிதத்தில், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக முன்னைய விசாரணைகளில் காணக்கூடிய சில குறைபாடுகளை களைவதற்கு உள்ளூர் விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த விசாரணையை சுதந்திரமான வெளிநாட்டு பார்வையாளர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான தேசிய

11

## நாகபட்டினம்-காங்கேசன் இடையே கப்பல் சேவை சனியன்றே ஆரம்பம்

சென்னை, ஒக். 12

நாகபட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு கடந்த 10 ஆம் திகதி முதல் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்க இருந்த நிலையில், கப்பல் போக்குவரத்து இன்று வியாழக்கிழமைக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் குறித்த திகதி மீண்டும் மாற்றப்பட்டு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7 மணிக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மத்திய அமைச்சர்கள் கூடுதலான நிகழ்ச்சிகளில் பங்கேற்க இருப்பதால் இந்த திகதி மாற்றம் எனக் கூறப்படுகிறது.

மத்திய துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்து அமைச்சர் சர்பானந்த சோனாவால, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் இதில் பங்கேற்க வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## உறுதியளித்த விடயங்களை ரணில் நிறைவேற்றவில்லை

### விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஒக். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உறுதியளிக்கப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லையென சுட்டிக்காட்டி தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளு மன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

ஜேர்மன் பத்திரிகையாளருக்கு ஜனாதிபதி அளித்த நேர்காணல் மூலம் வெளிநாடுகளில் பெற்றிருந்த வெற்றிகள் அனைத்தும் களங்கப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

11

## பதில் பொலிஸ்மா அதிபராக நிலந்த ஜயவர்த்தன நியமனம்

கொழும்பு, ஒக். 12

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன, பதில் பொலிஸ்மா அதிபராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்மா அதிபர் சீ.டி. விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்டுள்ள சேவை நீடிப்பு காலம் நேற்று முன் தினத்துடன் நிறைவடைந்துள்ள நிலையிலேயே நிலந்த ஜயவர்தன பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாகதாகவும் அறியமுடிகிறது. (அ)

## ஜனாதிபதி தேர்தலை பிற்போட ஆதரவளிக்காது மொட்டு கட்சி

கொழும்பு, ஒக். 12

“தற்போதைய ஜனாதிபதியின் பதவி காலம் முடிவடைந்த கையோடு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். எனவே, தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிகள் இடம் பெறும்பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்கமாட்டோம்.”

இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட அவர் இது தொடர்பில் மேலும்

11

## அரசியலே வேண்டாம்!

### கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஒக். 12

அடுத்த தேர்தலில் தான் போட்டியிடப்போவ தில்லை. எனது அரசியல் பயணம் ஒரு தடவைக்கு மட்டுமே மட்டுப் படுத்தப்பட்டதாக இருக்கும் - என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

“அரசியல் எனக்கு அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. அடுத்த தேர்தலில்

11

## தந்தை ஜனாதிபதி என்பதற்காக மகனும் ஜனாதிபதியாக முடியுமா?

### கேள்வி எழுப்புகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஒக். 12

“தந்தை நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக அவரது பிள்ளையால் ஜனாதிபதியாக முடியுமா?”

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

11

## சீனா - இலங்கை இணக்கப்பாடு; எங்களிற்கு எதுவுமே தெரியாது

### கைவிரிக்கிறது சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, ஒக். 12

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விசேட உடன்பாடு எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து தனக்கு தெரியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர்

11

ஈழநாடு



## அரசியலே...

போட்டியிடமாட்டேன். அழைப்புகள் வந்தாலும் அதனை ஏற்கும் நிலையில் இல்லை. எனது தொழில்சார் நடவடிக்கையை முன்னெடுக்கவே எதிர்பார்த்துள்ளேன்.

அரசியலுக்கு வந்து ஒரு சதம்கூட சம்பாதித்தது கிடையாது, அதற்கான தேவைப்பாடும் எனக்கு இல்லை. எனது குடும்பத்தாரும் நான் அரசியலில் ஈடுபடுவதை விரும்பவில்லை. நெருக்கடி யான நேரத்தில் நாட்டைவிட்டு செல்ல முடியாது. அதனால்தான் நெருக்கடி யான காலகட்டத்தில் நிதி அமைச்சு பதவியைக்கூட ஏற்றேன். மே 9 ஆம் திகதிக்கு பிறகு அரசியல் முழுமையாக வெறுத்துவிட்டது. " - என்றார் அவர். (அ)

## ஜனாதிபதியை...

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்கும் வகையில் மூன்று புதிய இருதரப்பு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

'ஐயோரா' என அழைக்கப்படும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டில் கலந்துகொள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கர் நேற்று முன்தினம் மாலை இலங்கை வந்தடைந்தார்.

நேற்று 'ஐயோரா' மாநாட்டில் கலந்துகொண்ட எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதியை சந்தித்தார்.

இந்த சந்திப்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது முதலீடுகளை ஊக்குவிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

## வெளிநாடுகளின்...

கத்தோலிக்கக் குழுவின் உறுப்பினர்களான கர்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட பல ஆயர்கள் கையெழுத்திட்ட கடிதத்தில் முந்தைய விசாரணைகள் முக்கியமான பிரச்சினைகளை புறக்கணித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க எப்.பி.ஐ உளவுத்துறையால் சி.ஐ.டியிடம் ஐ.பி. முகவரி ஒப்படைக்கப்பட்ட நபர் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை, சோனிக் சோனிக் என அடையாளம் காணப்பட்ட ஐ.பி பண்டாரவின் விசாரணையை நிறுத்துதல், அபு ஹிந்தை அடையாளம் காணத் தவறியமை, குண்டுதாரி ஜெமிலுக்கு புலனாய்வுப் பிரிவுகளுடன் இருந்த தொடர்பைக் கண்டறிய விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியமை மற்றும் களனிகம வெளியேறும் இடத்தில் வெடிபொருட்கள் ஏற்றப்பட்ட லொறி ஒன்று கடந்து செல்ல அனுமதிக்கப்பட்ட சம்பவம் என்பன உரிய முறையில் ஆராயப்படவில்லை என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இராணுவப் புலனாய்வு இயக்குநரகம் மற்றும் அரச புலனாய்வுச் சேவை ஆகியவை சஹ்ரானுடன் நெருங்கிய உறவுகளை கொண்டிருந்தன என்பது தெளிவாகிறது. இந்த விசாரணைகளைத் தடுக்கவும் நாசவேலை செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன" என்று கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.

சனல் 4 காணொளியில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் குழு கோரியுள்ளது. இந்த விசாரணையை சுதந்திரமான வெளிநாட்டு பார்வையாளர்கள் கண்காணிக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரோல்ட் அந்தோனி பெரேரா, சிலாபம் ஆயர் வலன்ஸ் மெண்டிஸ், காலி ஆயர் ரேமண்ட் விக்கிரமசிங்க, உதவி ஆயர்களான ஜே.டி.அந்தோனி ஜெயக்கொடி, அன்டன் ரஞ்சித் மற்றும் மக்ஸ்வெல் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். (அ)

## தந்தை...

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தலைமைத்துவம் காலத்திற்கு காலம் மாறும். இது யதார்த்தம். தந்தையின் மகுடத்தை மனுக்கு கொடுக்க முடியாது. தந்தை ஜனாதிபதி என்பதால் மகனால் ஜனாதிபதியாக முடியாது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை கட்சியே தீர்மானிக்கும். அது தொடர்பில் எதிர்காலத்தில் நடைபெறும் கலந்துரையாடல்களில் தீர்மானிக்கப்படும்.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு தம்மிக்க பெரேரா விருப்பம் தெரிவித்துள்ளமையின் ஊடாக பொதுஜன பெரமுனவின் ஸ்திரத்தன்மையை அறிந்துகொள்ள முடியும்-என்றார். (அ)

## ஜனாதிபதித்...

கூறியவை வருமாறு:-

ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும் நபருக்கு அப்பதவியை வகிப்பதற்கு கால எல்லை ஒன்று இருக்கின்றது.

பாராளுமன்றத்துக்கும் அப்படிதான். பொதுஜன பெரமுன கட்சி என்பது ஜனநாயகத்துக்காக போராடும், குரல் கொடுக்கும் கட்சியாகும். மஹிந்த ராஜபக்ச காலத்தில் முன்கூட்டியே தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு இல்லை.

எனவே, குறித்த காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட்டு, மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். மக்களுக்கு உள்ள இந்த ஜனநாயக உரிமையை பறிப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அந்தவகையில் உரிய காலத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது குறித்து எங்கும் கருத்து வெளியிடப்படவில்லை, சமூகத்தில் இருந்தும் அவ்வாறானதொரு கோரிக்கை விடுக்கப்படவில்லை. எனினும், தேர்தலை ஒத்திவைக்க முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு ஆதரவு வழங்கபோவதில்லை. தேர்தல் உரிமையை பெறுவதற்காக எல்லா வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

## மோடியை...

நீதிபதி ரி.சரவணராஜா விவகாரம் தொடர்பில் வெளிநாட்டு தூதர்கள், ஐ.நாவுக்கு அனுப்பவுள்ள கடிதத்தின் இறுதி வரைவை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், யாழ்ப்பாணத்தில் நேற்று அவரது வாசஸ்தலத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களுக்கு இடையிலான சத்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

உடனடியாக கடிதத்தை அனுப்புவதா இல்லையா என்பது குறித்து எதிர் வரும் வெள்ளிக்கிழமை நாங்கள் மீளவும் கூடியே தீர்மானம் எடுக்கவுள்ளோம்.

இன்று சில கட்சி தலைவர்கள் வருகைதராமையின் காரணமாக இறுதி முடிவு எட்டப்படவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு காணப்படுகின்றது.

தற்பொழுது நாட்டின் நிலை குறித்தும்,தமிழ் மக்களது நிலை குறித்தும் 13 ஐ அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் அவருடன் பேச நாம் விருப்பமாக இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழரசுக் கட்சி ,ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஜனநாயகப் போராளிகள் கட்சி,தமிழ் தேசிய கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

கட்சித் தலைவர்கள் அனைவரும் இதற்கு சம்மதம் தெரிவிக்கின்ற பொழுதுதான் இது முழுமையான செயல்வடிவம் பெறும்-என்றார். (அ)

# பிரதேச செயலக பண்பாட்டு விழா கோலாகலமாக இடம்பெற்றது!



வடமராட்சி,ஒக்11

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக 2023ஆம் ஆண்டுக்கான பண்பாட்டு பெருவிழா மிக மிக சிறப்பாக நேற'்று இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி தலைமையில் இந்நிகழ்வு பெற்றது.

முதல் நிகழ்வாக ஊர்திகள் முன்னே பவனிவர காவடி , நடனம், உட்பட்ட கலைஞர்கள் அணிவகுத்துவர விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வடமாராட்சி கிழக்கு கலாசார மண்டப முத்தையா அரங்குக்கு அழைத்துவரப்பட்டனர்.

மங்கல விளக்கை யாழ் மாவட்ட செயலாளர் சிவபாதசுந்தரம், வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிச் செயலாளர், கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்ட ஆயுள்வேத வைத்தியர் யோகநாதன் யாழ் மாவட்ட செயலக கலாசசார சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், பிரதேச சமூக சேவையாளரும் கலைஞருமான சோதிலிங்கம், மருதங்கேணி இலங்கை வங்கி முகாமையாளர், காத்தவராயன் கூத்து அணணாவியார் இராமநாதன் பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி, உட்பட பலரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழ் மொழி வாழ்த்து, வரவேற்பு நடனம், வரவேற்புரை தலைமை உரை என்பன இடம் பெற்றதுடன் வடமராட்சி கிழக்கு பிரதேச பிரதேச கலைஞர்களின் நடனம் நாடகம் கிராமிய பாடல்கள் கவிதை பாட்டு போன்ற பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வுகளில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட பல்வேறு கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள், என் பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# நவம்பர் 25 இற்கு பின்னரே சீன கப்பல் இலங்கை வரும்

கொழும்பு, ஒக். 12

சீன உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கப்பலான ஷி யான் 6 கப்பலை எதிர் வரும் நவம்பர் 25 ஆம் திகதிக்கு பின்னர் இலங்கை வருமாறு அறிவித்துள்ளோம் - என்று வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

" இலங்கையில் முக்கியமான சில மாநாடுகள் நடைபெறவுள்ளன. ஜனாதிபதி சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். அதேபோல பிரான்ஸ் குழுவொன்று இலங்கை வரவுள்ளது. எனவேதான் நவம்பரில் வருமாறு தெரியப்படுத்தியுள்ளோம்." - எனவும் வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

ஒக்ரோபர் மாதமே குறித்த கப்பல் இலங்கை வரவிருந்தது. மாநாடுகள் காரணமாகவா அல்லது இந்தியாவின் அழுத்தம் காரணமாகவா தாமதித்து வருமாறு கோரப்பட்டுள்ளது என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர்,

"அழுத்தங்கள் இல்லை எனக் கூற முடியாது. எல்லா பக்கங்களிலும் அழுத்தங்கள் உள்ளன. பலம்பொருந்திய நாடுகளுக்கிடையில் போட்டி உள்ளது. இலங்கை கேந்திர முக்கியத்துவமிக்க இடத்தில் அமைந்துள்ளது. எனவே, எல்லா விடயங்களையும் கருத்திற் கொண்டுதான் உரிய முடிவு எடுக்கப்பட வேண்டும். அனைத்து நாடுகளுடனான நட்புறவு எமக்கு அவசியம்.

சீனாவுடனான நட்புறவும் எமக்கு முக்கியம். நாம் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. நவம்பரில் வருவதற்கான வாய்ப்பையே வழங்கியுள்ளோம். சுதந்திர நாடு என்ற அடிப்படையில் அதற்கான சுதந்திரம் எமக்கு உள்ளது.

இந்து சமுத்திர வலயம் சமரச வலயமாக இருக்க வேண்டும், இதனை பிரதான விடயமாக கருதியே இலங்கை செயற்படும். இலங்கை அணிசேரா கொள்கையை கடைபிடிக்கும் நாடாகும். இந்தியாவுடனான உறவும் எமக்கு முக்கியம். நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியா உதவியது. மேற்குலக நாடுகளுடனான உறவும் முக்கியம்." - என்றார்.

## உறுதியளித்த...

இதன் ஊடாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கடும்போக்கு சிங்களவர்களின் வாக்குகளை உறுதிப்படுத்திய போதிலும் சிங்களவர்கள் அல்லாதவர்களின் வாக்குளை இழக்கலாம் எனவும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் வாக்குகள் தேவையில்லாவிடில், தங்களிடம் அதனை கூறுமாறும் குறித்த கடிதத்தில் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், தமிழர்கள் பொதுவான தமிழ் வேட்பாளரை நியமிப்பது பற்றி சிந்திப்பதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் உறுதியளிக்கப்பட்ட பல விடயங்கள் நடைமுறைக்கு வரவில்லை என தெரிவித்துள்ள சி.வி.விக்னேஸ்வரன், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கூடிய ஆலோசனைக் குழு இதுவரை நியமிக்கப்படவில்லை எனவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## சீனா...

பீட்டர் புரூவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அதற்கு கடன் வழங்கிய நாடுகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் இடம்பெறுவதை நாங்கள் அறிவோம். எனினும் விசேட இணக்கப்பாடுகள் குறித்து எதுவும் எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

## இப்படியும் நடக்கிறது

தெற்கில் இப்போது பேசு பொருளாகியிருப்பது அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்க ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவும் பொதுஜன பெரமுன வின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவும் கூட்டாக திட்டமிடு கின்றனர் என்ற விவகாரம்தான்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வ தற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதென்றும் அந்த வாக்கெடுப்பில் அடுத்த பாராளு மன்றத் தேர்தல்வரை தற்போதைய ஜனாதிபதியே பதவியில் தொடர் வார் என்றும் மக்களின் ஆணை யைப் பெற்று, 2025 ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடை பெறும்வரை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியில் தொடர்வது என்றும் திட்டமிட்டு இரகசிய மாக காய்நகர்த்தி வருவதாகவும் தெற்கில் இப்போது பேசப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் பஸில் ராஜபக்ஷவும் சந்தித்து பேசிய பல நாட்களின் பின்னரே அப்படியொரு திட்டம் குறித்து, இருவரும் பேசியதாகவும் அதற்கான காய்நகர்த்தல்களில் இருவரும் ஈடுபட்டிருப்பதாகவும் கொழும்பில் செய்தி கசிய விடப் பட்டது.

இத்தகைய செய்தியை அவர் களே திட்டமிட்டு கசியவிட்டதாக வும் கூட நம்பப்படுகின்றது. இவ்வாறு ஒரு செய்தி வெளித் தெரியும்போது, எதிர்க்கட்சிகள் அதுபற்றி பரவலாக கண்டனங் களை கிளப்பும் என்பது தெரிந்தது தான். அவ்வாறு எதிர்க்கட்சியினர் பேசுகின்றபோது, அதுபற்றி மக்களின் மனநிலையை அறிந்து கொள்ளலாம் என்பதும் அந்தச் செய்தியை கசிய விட்டதன் நோக்கமாக இருக்கலாம் என்கின் றன கொழும்பு செய்திகள்.

ஆனால் எப்போதுமே ஏதா வது ஒரு விடயத்தை கிளப்பி விட்டுவிட்டு, மற்றவர்கள் அதுபற்றி பேசிக்கொண்டிருக்க அல்லது போராடிக்கொண்டிருக்க தான் தனது அன்றாட வேலை களை கவனிப்பது ரணில் வழக்கம் என்பதும் நமக்கு தெரியாததல்ல.

அண்மைக் காலமாக அரசியல் கட்சிகள் எல்லாமே ஜனாதிபதித் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து தத்தமக்குள் தீவிரமாக பேசிக்கொண்டிருந்தன. யார் யாருடன் அணி சேர்வது என்பதிலும் எப்படி ரணில் தரப் பிற்கு எதிராக பொதுவேட்பாளர் ஒருவரை போட்டியிடச் செய்வது என்பதிலும் அனைத்து எதிரணி யினரும் தீவிரமாக பேசிக்கொண் டிருந்தனர். அவர்களின் இந்த முயற்சி எப்படி போய்க் கொண்டிருக்கின்றது என்பதில் 'கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிவிட்டு பார்த்துக் கொண் டிருப்பது' என்று சொல்வார்களே, அதுபோல பார்த்துக்கொண்டி ருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க.

எதிரணியினரின் இந்த நகர்வை தடுத்து நிறுத்தி அனைவரின் கவ னத்தையும் வேறு திசையில் ஓட வைப்பதற்காகவே இந்த நிறை வேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு என்ற ஆயுதத்தை கையில் எடுத் திருக்கிறார் ரணில் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டா ரங்கள்.

அடுத்து நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து, பொதுஜன பெரமுனவிலி ருந்து பிரிந்து இயங்கிக் கொண்டி ருக்கும் நிமல் லான்சா அணியின ரின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று அண் மையில் கொழும்பில் நடைபெற் றிருக்கின்றது. இதுவரை அவர்க ளின் அணியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் இணைந்தி ருப்பதாக கூறப்படுகின்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர்களின் 'அரசியல் தத்துவாசிரியர்' என்று நம்பப் படும் ஒரு முக்கிய பிரமுகரை கொழும்பில் அண்மையில் சந்திக்க முடிந்தது.

அவருடையை தகவலின் படி, ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு கிடைக்காது என்று ரணில் விக்கிரமசிங்க நம்புகின்ற பௌத்த கடும் கோட்பாளர்களின் வாக்கு களை அவருக்கு பெறுவதை உறுதி செய்வதே இந்த அணியின் பிர தான நோக்கம் என்று தெரியவரு கின்றது.

அந்த வாக்குகளை இலக்கு வைத்தே ஜனாதிபதி ரணில் அண் மைக்காலமாக பல்வேறு நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றார். ஜேர்மனி தொலைக்காட்சி பேட்டியில் சர்வதேச விசாரணை பற்றி பேட்டியாளர் கேள்வி கேட் டதும், ஆத்திரப்பட்டு அவர் 'பொங்கி' எழுந்ததன் பின்னாலும் இந்த வாக்காளரை இலக்கு வைத் ததே காரணம் என்றும், இதனால் சர்வதேச ரீதியில் ஏற்படுகின்ற பாதமான நிலையால் ஏற்படுகின்ற நஷ்டங்களைவிட தெற்கில் அதனால் ஏற்படுகின்ற சாதகமான நிலைமை அதிக லாபம் தரக்கூடி யது என்று அவர் கணக்கிட்டிருக் கலாம் என்கின்றார் அந்த அரசியல் தத்துவாசிரியர்.

இந்த ஊர்க்குருவியின் நோக் கம் எல்லாம், அந்த அணியினர் இனப்பிரச்சனை விவகாரத்தில் என்ன கொள்கையுடன் இருக்கின் றனர் என்பதை அறிந்து கொள் வதே. அதனை அறிய முயன்ற போது கிடைத்த செய்தி ஆறுத லைத் தந்தது. இந்த அணியின் பின்னால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே இருப் பதாக கூறப்பட்டுவந்ததால், அவர்கள் அவரது கொள்கை யையே பின்பற்றுவார்கள் என்று நம்பிக்கொண்டிருந்தேன். ஏனெ னில் கோட்டாபயவைப் பொறுத்தவரை இனப்பிரச்னை என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லை என்று நம்புபவர். அவரது அரசியல் வாரிசுகள் என்று சொல லிக்கொள்ளும் அவர்களும் அதே கொள்கையுடன்தானே இருப் பார்கள் என்று நம்பிக்கொண்டி ருந்த எனக்கு அவரின் பதில் ஆச்சரியத்தைத் தந்தது.

'நாங்கள் பதின்மூன்றை முழு மையாக அமுல்படுத்துவதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் 13 பிளஸுக்கு அனுமதிக்க மாட் டோம்' என்றார் அவர்.

ஊர்க்குருவி பதின்மூன்றை தமிழ் மக்களுக்கு தினிக்கப் பார்க்கிறார் என்று இனி யாரும் பொங்கி எழுவார்களோ தெரிய வில்லை. ஆனால் எமது மகிழ்ச்சி எல்லாம் அவர்கள் இந்த அள விற்கு இறங்கி வந்திருக்கிறார்கள் என்பதே!

**-ஊர்க்குருவி.**

# 10000 வீட்டுத் திட்டத்துக்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து



கொழும்பு, ஒக். 12

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் மலை யகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்து ணர்வு ஒப்பந் தம் நேற்று ஜனாதிபதி செய லகத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், நேற்று முக்கிய சந்திப்பு களில் ஈடுபட்டதுடன், ஒப்பந்தங்களிலும் கைச் சாத்திட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலை மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடை பெற்ற நிகழ்வுகளில் ஆரம்பமாகவே 10 ஆயி ரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செய லாளரும், நீர்வழங்கல் மற் றும் தோட்ட உட்கட்ட மைப்பு வசதிகள் அபிவி ருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இலங்கை சார்பில் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட் டார். இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே இந்தியா சார்பில் கையொப்பமிட்டார்.

அத்துடன், இந்திய அரசின் நிதி உதவியு டன் நிர் மாணிக்கப்பட்டுள்ள 126 வீடுகள், நிகழ்நிலை ஊடாக திறந்து வைக்கப்பட்டு, பய னாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பதுளை, மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலேயே மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த கோரிக் கையின் பிரகாரம் இந்திய அரசால் மலையகத்தில் ஏற்கனவே 4 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் மோடி, மலையகம் வந்தி ருந்தவேளை 10 ஆயிரம் வீடுகளுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டது.

முன்னர் வீடொன்றுக்கு 10 இலட்சம் ரூபா உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை யில் வீடொன்றுக்கு 28 இலட்சம் ரூபா செல வாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் தேனுகா விதான கமகே, பாராளுமன்ற உறுப்பினர் எம். ரமேஸ்வரன், ஜனாதிபதி யின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதி பதியின் பணிமனையின் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்க ளுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதி பதியின் செயலாளர் திரு.சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு மதி. அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் திரு. தினுக் கொலம்பகே மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி என பல முக்கியஸ்தர்க ளும் கலந்து கொண்டனர். (அ)

# இளைஞரிடம் கொள்ளை கைதானோருக்கு மறியல்

தென்மராட்சி, ஒக். 12

இளைஞர் ஒருவரை தாக்கி அவரிடமிருந்து தங்க நகைகள், கைக்கடிகாரம், தொலைபேசி மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்ட குற்றச் சாட்டில் கைதான ஆறு பேரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

கடந்த 27 ஆம் திகதி குறித்த குழுவினர் தொலை பேசி ஊடாக பாதிக்கப்பட்ட இளைஞனை மறவன்புல வுக்கு வரவழைத்துள்ள னர்.

அங்கு இளைஞனைத் தாக்கி அவரிடமிருந்த நான்கரைப் பவுண் தங்க நகைகள், இரண்டு கைபேசி கள், கைக்கடிகாரம் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டு தப்பினர். இவற்றின் பெறு மதி 10 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்படுகின் றது.

இதனையடுத்து, பொலி ஸார் மேற்கொண்ட விசார ணையில், சிலாபத்தை சேர்ந்த 3 பெண்களும், கனக ராயன்குளத்தைச் சேர்ந்த இரு ஆண்களுமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது குறித்த நகைகளை கொள்வனவு செய்த வவுனியாவைச் சேர்ந்த கடை உரிமையாளர் அவற்றை உருக்கி தங்க கட்டு களாக மாற்றிய நிலையில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், சாவ கச்சேரி நீதிமன்றில் குறித்த சந்தேக நபர்கள் 6 பேரை யும் செவ்வாய்க்கிழமை முற்படுத்தியபோது அவர் களை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

### காலிமுகத்திடலில் பிக்குவின் சடலம்!

கொழும்பு, ஒக். 12

கொழும்பு காலிமுகத்தி டல் கடற்கரையில் இனந் தெரியாத நபரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

மொட்டை மழிக்கப்பட்ட தலையுடன் காவி உடையும் சடலத்தில் காணப்பட்டது. 35 - 40 வயது அவருக்கு இருக்கலாம் என்றும் கணிக் கப்படுகின்றது.

இதனால், இறந்தவர் பிக்குவாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

### கோழி இறைச்சி விலை குறையும்

கொழும்பு, ஒக். 12

எதிர்வரும் ஒரு வாரத்திற் குள் ஒரு கிலோ நெத்தலி யின் விலை 200 முதல் 250 ரூபாவுக்குள் குறைக்கப்பட வுள்ளதாக வர்த்தக அமைச் சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, 1250 ரூபா வரையில் தற்போது விற் பனை செய்யப்படும் கோழி இறைச்சியின் விலையை டிசம்பர் மாதமளவில் 850 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என எதிர்பார்ப்ப தாகவும் அவர் கூறினார்.

கடந்த காலங்களில் கோழி இறைச்சி, முட்டை, கருவாடு மற்றும் மீனின் விலைகள் அதிகரித்திருந்த மையால், நாட்டில் போஷாக்கு தொடர்பான பிரச்சினை ஏற்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டி னார். (அ)

Eelanadu
12.10.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## விக்கியின் பிரச்னை?

ரணில் விக்கிரமசிங்க, தனக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது இழுத்தடித்து வருவதாக, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதிய கடிதத்திலேயே, அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க - கூறுவது போன்று விடயங்களை முன்னெடுக்கக்கூடிய அரசியல் சூழல் இருக்கின்றதா என்பதையே முதலில் விக்னேஸ்வரன் சிந்தித்திருக்கவேண்டும் - அதன் பின்னரே, ரணிலின் மூலம் எவ்வாறான பிரச்னைகளை தீர்க்க முடியுமென்னும் தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க, அதிகாரம்மிக்க ஜனாதிபதியாக இருந்தாலும் கூட, அவரால் ஒரு கட்டத்திற்கு மேல் எதனையும் செய்யக் கூடிய அரசியல் நிலைமை தென்னிலங்கையில் இல்லை. ரணிலை பொறுத்த வரையில், முதலில் அதிகாரம், அதன் பின்னர்தான் எதனைப் பற்றியும் சிந்திக்க முடியுமென்னும் நிலையிலேயே இருக்கின்றார். அதிகாரத்தில் தொடர்வதற்காக ராஜபக்ஷ ஆதரவு அணியினருடனும், அவர் சமரசம் செய்ய வேண்டியிருக்கின்றது - அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக ஏனைய தரப்புக்களையும் அரவணைக்க வேண்டியிருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில்தான், அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக ரணில் அறிவித்தார். அது தொடர்பான முன்மொழிவுகளை தருமாறு அனைத்து கட்சிகளையும் கோரியிருந்தார். உண்மையில் அரசியலமைப்பில் இருப்பதை நிறைவேற்றுவதற்கு கட்சிகளின் முன்மொழிவுகள் தேவையில்லை - ஆனால் ரணிலோ, தானாக விடயங்களைச் செய்யவில்லை - அனைவரது ஆதரவுடன்தான் விடயங்களை முன்னெடுக்கின்றேன் என்பதை காண்பிக்கும் வகையிலேயே விடயங்களை திட்டமிட்டிருந்தார்.

இவ்வாறாதொரு பின்னணியில்தான், விக்னேஸ்வரன் அணியினரின் ஆலோசனையான, மாகாண சபை தேர்தல் இடம்பெறும் வரையில், ஆலோசனை சபையொன்றின் மூலம் மாகாண சபையை நடத்திச் செல்லும் ஆலோசனையொன்று பரிந்துரைக்கப்பட்டது. ஆரம்பத்தில் அதற்கு ஆதரவான நிலைப்பாட்டையே ரணில் வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் அவர் கூறியவாறு விடயங்கள் இடம்பெறவில்லை. உண்மையில் அதற்கான தற்துணிவுடன் ரணில் இல்லையென்பதுதான் உண்மை.

ஏனெனில் அவ்வாறானதொரு முயற்சியை முன்னெடுத்தால், அதன் மூலம் தனது ஜனாதிபதித் தேர்தல் கணக்கு பிழைத்துவிடுமோ - என்னும் எச்சரிக்கையுடன்தான், அவர் விடயங்களை நகர்த்துகின்றார். இதனை விக்னேஸ்வரன் புரிந்து கொண்டிருக்க வேண்டும் - ஆனால் அவர் புரிந்துகொள்ளவில்லை - மாறாக, ரணில் ஒரு தனிநபராக விடயங்களை செய்வாரென்று கண்மூடித்தனமாக நம்பினார் - அது நடைபெறாத போது, ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

உண்மையில் தமிழர் தரப்புக்கள் ஒருங்கிணைந்த செயற்பாடு ஒன்றின் ஊடாக, தங்களின் புத்திசாதுரியமான, தந்திரமான நகர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். இவர்கள் தனக்கும் தேவையென்னும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் - ஆனால் ரணில் தமிழ் தரப்புக்கள் தொடர்பில் வேறுவிதமாக கணக்குப் போடுவதாகவே தெரிகின்றது. தமிழ்க் கட்சிகள் என்னதான் கூறினாலும் தான் போட்டியிட்டால், தமிழ் மக்கள் தனக்குத்தான் வாக்களிப்பார்களென்றே அவர் உறுதியாக நம்புவதாக தெரிகின்றது. இந்த மனோநிலையை சவாலுக்கு உள்ளாக்கினால் மட்டும்தான், தமிழர்களை நோக்கி கொழும்பு திரும்பும். இல்லாவிட்டால் தமிழர் தரப்புக்களின் கூக்குரல்கள் எவரது செவிக்கும் எட்டாதவொரு விடயமாகவே நோக்கப்படும். தற்போது அவ்வாறான நிலையில்தான் இருக்கின்றது.

# யாழில் கைக்குண்டுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 12

நெல்லியடிப் பகுதியில் கைக்குண்டுடன் நபர் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபருக்கு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் சம்பவங்களில் தொடர்பு இருப்பது பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாழ்ப்பாணத்தில் தேசிய கீதம் தமிழில் பாடப்படாதமை கவலையளிக்கின்றது!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 12

“யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாதமை கவலையளிக்கின்றது” என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடப்படாதமையை சுட்டிக்காட்டியிருந்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

தமிழர் பண்பாடு எனக் கூறி இங்கு சில நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும் இங்கு தேசிய



கீதம் தமிழில் பாடப்படவில்லை. இது மனவருத்தத்துக்குரியது. நான் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகளிலும்,வட மாகாணத்தில் நான் தலைமைத்துவம் வகிக்கின்ற நிகழ்ச்சிகளிலும் பொதுவாக தேசிய கீதம் தமிழிலேயே பாடப்படுவதுண்டு.

சிலவேளை வேறு அமைச்சர்கள் வருகின்றபோது என்னுடைய கையை மீறி போய் இருக்கலாம். அதை நான் கண்டித்ததுண்டு. இன்றைக்கும் ஒரு தவறை இங்கிருக்கும் அதிகாரிகள் விட்டுவிட்டார்கள்.

இங்கு நடக்கின்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் தேசிய கீதம் தமிழில் பாடப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய வலுவான கருத்து. சமீபத்தில் கூட ஜனாதிபதி மட்டக்களப்பிலும் இது தொடர்பான கருத்தைச் சொல்லி இருக்கின்றார். தேசிய விழாவில் கூட ஆரம்பத்தில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டு நிகழ்ச்சி முடிகின்ற நேரத்தில் தமிழில் பாடுவதற்கான ஏற்பாடு செய்திருக்கின்றார்.

அந்த வகையில் ஜனாதிபதியை பொறுத்த வரையில் அல்லது அவருடைய அரசாங்கத்தை பொறுத்த வரையில் கொள்கையும் செயற்பாடும் ஒன்று தான். சில வேளைகளில் சில அதிகாரிகள் அவ்வாறான தவறுகள் விடுகின்றார்கள் ஆனபடியால் இங்கே முக்கியமான அதிகாரிகள் எல்லாம் இருக்கின்றார்கள். அவர்கள் வரும் சந்தர்ப்பங்களில் அவற்றை கருத்தில் எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன்- என்றார். (அ)

# இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் வேலை

கொழும்பு, ஒக். 12


விசேட திறன்களைக் கொண்ட இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கு புதிய ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

செவிலியர் சேவைகள், உணவு பதப்படுத்துதல் மற்றும் விவசாயத் துறைகள் தொடர்பாக, இதன் கீழ், இந்த நாட்டின் இளைஞர்கள் 5 வருட சேவைக் காலத்திற்கு வேலை வாய்ப்புகளைப் பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய மொழிப் புலமைப் பரீட்சை மற்றும் விசேட திறன் தொடர்பான பரீட்சையின் 4ஆம் நிலை சித்தியடைந்த இளைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 12 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 25
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரையோதசி




**மேடம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
கடந்த கால இனிய சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. . திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். செலவுகள் கட்டுக் கடங்காமல் போகும் போது வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். கவனமான நாள்.

**துலாம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கை யாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் உயர்அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**விருட்சிகம்**
நீண்ட நாள் ஆசை யில் ஒன்று நிறைவேறும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத் தாகும். சக ஊழியர்கள் ஒத்து ழைப்பார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கும்பம்**
எதையும் தன்னம்பிக் கையுடன் செய்யத் தொடங்குவீர் கள்.வியாபாரத்தில் வாடிக்கையாளர் களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தி யோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

# 7 பேர் விடுதலை யாருக்கு சொந்தம்: முதல்வர் - எதிர்கட்சி தலைவர் விவாதம்!

சென்னை, ஒக். 12

**ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வந்த 7 பேர் விடுதலைக்கு உரிமை கோரி முதல்வர் ஸ்டாலினுக்கும் எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமிக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றது.**

**நேற்று முன்தினம் சபையில் நடந்த இந்த விவாதம் வருமாறு**

**ஸ்டாலின்: முஸ்லிம் கைதிகள் முன்விடுதலை குறித்து மிகுந்த அக்கறையுடன் பேசும் எதிர்க்கட்சி தலைவர், 10 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தபோது இந்த விஷயத்தில் கண்ணை மூடிக்கொண்டு இருந்தது ஏன்?**

பழனிசாமி: ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 7 பேர் விடுதலையை, அ. தி. மு. க. ஆட்சியில் இருந்தபோதுதான் செய்தோம்.

முதல்வர்: முஸ்லிம்கள்மீது அப்போது இல்லாத அக்கறை, இப்போது எப்படி வந்தது என்பதுதான் கேள்வி.

பழனிசாமி: 7 பேர் விடுதலைக்கு காரணம் அ. தி. மு. க. அரசு.

முதல்வர்: நீங்கள் எவ்வளவுதான் பாடுபட்டாலும், தி. மு. க. ஆட்சியில்தான் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

பழனிசாமி: நளினி தவிர்த்து மற்றவர்களின் தண்டனையை நிறைவேற்றலாம் என்று தி. மு. க. ஆட்சியில்தான் அமைச்சரவையில் அன்று கையெழுத்திட்டனர். அப்படிப்பட்டவர்கள்தான் அவர்களை விடுதலை செய்யவும் போராட்டம் நடத்தினர்.

பேரவை தலைவர்: நான் பதில் அளிக்க விடாமல் உங்களை மறிக்கவில்லை. 'முதல்வர் பேசி முடித்ததும், யாருக்கும் அனுமதி இல்லை' என்றும் கூறவில்லை. முதல்வர் பதிலளித்த நிலையில், பேசி முடித்துள்ளீர்கள். உங்களுக்கு முன்பே வாய்ப்பு கேட்டதால், ஜவாஹிருல்லா பேச வாய்ப்பு அளிக்கிறேன். அவர் பேசியதும், உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

(இதற்கிடையே, ஆட்சி குறித்து பழனிசாமி பேசியதால், திமுகவில் எதிர்ப்பு கிளம்ப, சலசலப்பு ஏற்பட்டது. பின்னர், பழனிசாமி பேச பேரவை தலைவர் அனுமதி அளித்தார்.)

பழனிசாமி: முஸ்லிம்களுக்கு நாங்கள் எதுவும் செய்யவில்லை என்பதுபோல முதல்வர் குற்றம் சாட்டுகிறார். பாபர் மசூதி சம்பவத்தின்போது, நாடு முழுவதும் பற்றியெரிந்த நிலையில், தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது. அமைதி பூங்காவாக இருந்தது.

ஜவாஹிருல்லா: முதல்வர் கூறுவதுபோல, கடந்த அ. தி. மு. க. ஆட்சியில் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. (அ. தி. மு. கவினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.)

முதல்வர்: உள்ளபடியே அக்கறை இருந்தால், முஸ்லிம் கைதிகளை விடுதலை செய்ய அ. தி. மு. க. சார்பில் ஆளுநரை சந்தித்து அழுத்தம் தர தயாராக இருக்கின்றனரா? - இவ்வாறு விவாதம் நடந்தது.

இதன் பின்னர் சபையில் அமைதியின்மை ஏற்பட பேரவையில் இருந்து அ. தி. மு. கவினர் வெளிநடப்பு செய்தனர். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பழனிசாமி,

அ. தி. மு. கவுக்கு முஸ்லிம்கள் மீது என்ன அக்கறை இருக்கிறது என்று முதல்வர் கேட்கிறார். கடந்த 1997 தி. மு. க. ஆட்சியில் கோவை உக்கடத்தில் காவலர் கொல்லப்பட்ட விவகாரத்தில் பொலிஸார் ரௌடிகளை அனுப்பி அங்குள்ள முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 19 பேர் உயிரிழந்தனர். ராஜீவ் கொலை வழக்கில் 7 பேர் விடுதலைக்கு காரணம் அ. தி. மு. க.அரசுதான். அ. தி. மு. க. அரசு அவர்களை காப்பாற்றி இருக்காவிட்டால் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கும் - என்றார்.

(ஐ)

## காவிரி நதி நீர் விவகாரம்:

# மத்திய அரசை கண்டித்து திருச்சியில் ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஒக். 12

காவிரி, 100 நாள் வேலைத் திட்ட விவகாரங்களில் மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து எதிர்வரும் 16ஆம் திகதி திருச்சியில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோஅறிவித்துள்ளார்.

இதுதொடர் பாக அவர் விடுத்த அறிக்கையில்,

உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப் பின்படி காவிரியில் இருந்து நீர் திறக்க கர்நாடக அரசை வலியுறுத்தியும், தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கக்கூடாது எனத் தூண்டிவிட்டு கர்நாடகத்தில் போராட்டம் நடத்தும் பா. ஜ. க. மற்றும் கன்னட அமைப்புகளைக் கண்டித்தும், தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை திறக்க காவிரி ஆணையம் உத்தரவிட வலியுறுத்தியும், தமிழகஅரசு பலமுறை வலியுறுத்திய பின்பும் பாராமுகமாகச் செயல்படும் மத்திய பா. ஜ. க. அரசைக் கண்டித்தும், 100 நாள் வேலைதிட்ட நிதியை குறைத்தும், மாநிலங்களுக்கு நிதியை விடுவிக்காமலும் அலட்சியப்படுத்தி வரும் மத்திய பா. ஜ. க அரசை கண்டித்தும் மதிமுக சார்பில் வரும் 16ஆம் திகதி காலை 10 மணிக்கு திருச்சியில் கட்சியின் முதன்மை செயலாளர் துரை வைகோ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்றுள்ளது.

(ஐ)

## காவிரி நதி நீர் விவகாரம்:

# தமிழக அரசை கண்டித்து பா. ஜ. க. உண்ணாவிரதம்!

சென்னை, ஒக். 12

காவிரி நீர் விவகாரத்தில் தமிழக அரசை கண்டித்து எதிர்வரும் 16ஆம் திகதி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தமிழக பா. ஜ. க. அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை வெளியிட்ட அறிக்கையில்,

“கடந்த 2018ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி முயற்சியால் காவிரி நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளாக எந்தப் பிரச்னையும் இல்லாமல், தமிழகத்துக்கு காவிரி நதி நீர் கிடைத்து வந்தது.

கர்நாடக மாநிலத்தில் தி. மு. க. கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடன், காவிரி நதி நீரைத் திறந்து விடாமல், திட்டமிட்டு தமிழக விவசாயிகளை வஞ்சித்து வருகிறது.

கர்நாடக அணைகளில் 80 சதவீதத்துக்கும் அதிகமாக தண்ணீர் இருந்தும் காங்கிரஸுடன் கூட்டணியில் இருக்கும் தி. மு. க. அரசு தண்ணீரை பெற்று தராமல் போராட்டம் நடத்துவது கண்டனத்துக்குரியது.

இந்த நிலையில், பா. ஜ. க. சார்பில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன்களை காப்பாற்றுவதற்காக ஒருநாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் வரும் 16ஆம் திகதி கும்பகோணத்தில் நடைபெறும்.

இதில், முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன், மாநிலப் பொதுச் செயலர் கறுப்பு முருகானந்தம், மாநில துணைத் தலைவர் கரு. நாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# பெரும் வசதி குறைபாடுகளுக்கு மத்தியில் வெற்றிகரமாக நெஞ்சறை சத்திரசிகிக்சை!

## சாதித்தது மன்னார் மருத்துவமனை

**மன்னார், ஒக். 12**

**வசதிக் குறைபாடுகளுக்கு மத்தியில் 'நெஞ்சறை' சத்திர சிகிச்சையை மன்னார் பொது மருத்துவமனையின் மருத்துவர்கள் வெற்றிகரமாக நடத்தி இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றியுள்ளனர்.**

**கத்திக் குத்து சம்பவத்தில் இளைஞர் நெஞ்சுக்குழியில் ஆழமான காயத்துக்கு உள்ளானார். இதனால், தொடர் குருதிப் பெருக்கை கட்டுப்படுத்த இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.**

**இந்த விடயம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,**

கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் மன்னார் பொது மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு 35 வயது இளைஞர் ஒருவர் வலது பக்க நெஞ்சு பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் சேர்க்கப்பட்டார்.

உடனடியாக அவர் சத்திர சிகிச்சை கூடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வலது பக்க நெஞ்சறையினுள் ஐ. சி. ரியூப் எனப்படும் குழாய் செலுத்தப்பட்டு அவருடைய நெஞ்சுக் குழியினுள் வேகமான தொடர் குருதிப்பெருக்கு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் அவசரமாக செய்ய வேண்டிய சி. ரி. ஸ்கான் வசதி மற்றும் நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணத்துவ வசதி என்பன மன்னார் மன்னார் மருத்துவமனையால் இன்மையால் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்ற முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால், அவரை வெலிசறை மார்பு நோய் சிகிச்சை மருத்துவமனைக்கு மாற்ற யாழ். போதனா மருத்துவமனை அறிவுறுத்தியது. இந்நிலையில், நோயாளி ஏறக்குறைய 3 லீற்றர் குருதியை இழந்திருந்தார். குருதிப்பெருக்கு மிகவும் வேகமாக இருந்தமையால் அவரை நோயாளர் காவு வண்டியில் பிறிதொரு மருத்துவமனைக்கு மாற்றுவது ஆபத்தானது என்பதால் அவருக்கு மன்னார் மருத்துவமனையிலேயே நெஞ்சறை சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

பொது சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் எம். மதுரகீதன் தலைமையிலான சத்திர சிகிச்சை குழுவும் உணர்விழப்பியல் மற்றும் அதி தீவிர சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஜூட் பிரசாந்தன் தலைமையிலான குழுவும் இணைந்து சத்திர சிகிச்சையை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

மருத்துவ நிபுணர்களால் சரியான தருணத்தில் எடுக்கப்பட்ட முடிவினாலும், ஏறக்குறைய மூன்று மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சை பிரிவின் திறமை வாய்ந்த அவசர நிலை பராமரிப்பாலும் இளைஞரின் உயிர் காப்பாற்றப்பட்டது.

இந்த சத்திர சிகிச்சைக்கு இரத்தவங்கிப் பிரிவு பெரும் சேவையை வழங்கியிருந்தது. மிகப் பெரிய அளவிலான குருதி மாற்றீடு செய்யப்பட்டே இந்த இளைஞரின் உயிர் காப்பாற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கைக்குண்டுடன் நெல்லியடியில் ஒருவர் கைது

வடமராட்சி, ஒக். 12

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி - துன்னாலையில் நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பாட்டார்.

கைதான நபர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர் என்றும் வவுனியாவை சேர்ந்த அவர் துன்னாலையில் நீண்டகாலமாக வசிக்கிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஐ-02)




# அச்சுவேலி - வல்லையில் 2,000 பனம் விதைகள் நடுகை!



வடமராட்சி, ஒக். 11

வல்லை வெளிப் பகுதியில் பனை நடுகை திட்டம் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அச்சுவேலி - வல்லை சந்திக்கு அண்மையாக உள்ள வெள்ள நீர் தடுப்பணையில் சுமார் 2 கிலோமீற்றர் நீளத்துக்கு இரண்டு பக்கங்களிலும் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

செலிங்கோ லைப் நிறுவனத்தின் அச்சுவேலி கிளையினரின் ஏற்பாட்டில் "கற்பக தருவை நாட்டுவோம். கவினுறு சூழலை ஆக்குவோம்" எனும் தொனிப் பொருளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

செலிங்கோ லைபின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர்களான பிரதீப், நிதிவண்ணன் ஆகியோரின் தலைமையில், பனை அபிவிருத்தி சபையின் ஓய்வுநிலை அலுவலரான பன்னீர்செல்வத்தின் மேற்பார்வையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்தி சபையின் மாவட்ட முகாமையாளர் நிருஷன், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலிக் கிளையின் முகாமையாளரான வரதராஜா, அச்சுவேலி மத்திய கல்லூரியின் அதிபர் ரவிச்சந்திரன் மற்றும் மாணவர்கள், அச்சுவேலி பொதுச் சுகாதார பரிசோதகரான சர்மிலன், வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளரான கபிலன், அச்சுவேலி தெற்கு கிராம அலுவலரான அனுஷன், யாழ்ப்பாணம் செலிங்கோ லைபின் ஆயுள் செயல்பாட்டு முகாமையாளரான சிவோதயன், செலிங்கோ லைபின் பிராந்திய விற்பனை முகாமையாளரான ராஜகோபால் மற்றும் பொது மக்கள், இயற்கை ஆர்வலர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

சிறப்பு விருந்தினர்களின் மங்கள விளக்கேற்றலை தொடர்ந்து உரைகளும் இடம்பெற்றன. போர் காலத்தில் ஆயிரக்கணக்கான பனைகள் அழிக்கப்பட்டன. பல்லாண்டு பயிரான பனை விதைகளை இங்கே நடுகை செய்வதன் மூலம் எதிர்கால தலைமுறை அதன் பயன்களை பெற்றுக் கொள்ளும் எனவும், தாம் தொடர்ந்தும் இத்தகைய பசுமை பணிகளை முன்னெடுக்க உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் கருத்துகளை பகிர்ந்திருந்தனர்.

(ஐ-02)

*- தம்புள்ளையில் நடந்த விபத்தில்-*

# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பெண் பொலிஸ் மரணம்!

வடமராட்சி, ஒக். 12

தம்புள்ளையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகன விபத்தில் பருத்துத்துறை பொலிஸ் நிலையத்தில் சமூக பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பெண் பொலிஸார் ஒருவர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தம்புள்ளையைச் சேர்ந்த சாந்திமா ரணசிங்க (வயது 24) என்பவராவார்.

இவர் நேற்று முன்தினம் கலேவல தலகிரியாகம பன்சலவுக்கு எதிராக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த டிப்பர் மோதி விபத்துக்குள்ளானார்.

இதில் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

குறித்த பெண் பொலிஸ் கடந்த திங்கட்கிழமை விடுமுறையில் வீடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# தமிழ்நாட்டில் வாழ முடியாது 3 இலங்கையர் நாடு திரும்பினர்!

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழக கடற்றொழிலாளர்களின் படகு மூலம் சட்ட விரோதமாக இலங்கைக்கு திரும்பிய மூவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் யுத்தம் இடம்பெற்றபோது - 1990ஆம் ஆண்டில் குடத்தனை வடக்கைச் சேர்ந்த தாயாரும் அவரின் மகன் மற்றும் மகளும் தமிழகத்துக்குச் சென்று சென்னையில் 30 வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

எனினும், சென்னையில் தொடர்ந்து வாழ முடியாத நிலையில் மூவரும் தமிழக கடற்தொழிலாளர்களின் உதவியுடன் படகு மூலம் யாழ்ப்பாணம், வடமராட்சி குடத்தனை பகுதியில் வந்திறங்கி, உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையிலேயே அந்த தாய், மகன், மகள் ஆகிய மூன்று பேரும் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# செயலி வழி சேவையை கண்டித்து ஓட்டோ சாரதிகள் நேற்று பேரணி!

## யாழ்ப்பாணம் நகரில் நடத்தினர்

யாழ்ப்பாணம், ஒக். 12

**முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.**

**யாழ்ப்பாணத்தில் அண்மையில் அறிமுகமான செயலி வழி முச்சக்கரவண்டி சேவையை கண்டித்தும், இதனை மக்கள் பயன்படுத்த வேண்டாம் என்றும் கோரியுமே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.**

பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமான பேரணி யாழ்ப்பாணம் நகரில் முடிவடைந்தது.

பேரணியில் பங்கேற்ற ஓட்டோர் சாரதிகள் "அரச அதிகாரிகளே எமக்கான நீதியை பெற்றுத் தாரங்கள் - நாங்கள் கோருவது எமது வாழ்வாதாரமே", "40 வருடமாக எமது சேவையைப் புறந்தள்ளிய செயலி மூலம் இயங்கும் கட்டண மானியை வெளியேற்று", "வெளியேறு, வெளியேறு செயலி கட்டண மானியே உடன் வெளியேறு", "அனுமதியின்றி செயல்படும் மீற்றரால் 2 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியா" போன்ற சுலோகங்களை அவர்கள் தமது முச்சக்கர வண்டிகளில் தொங்கவிட்டிருந்தனர்.





செயலி வழி மூலமான முச்சக்கர வண்டி சேவையால் நீண்ட காலமாக முச்சக்கர வண்டியினை தமது வாழ்வாதாரமாக கொண்டு செயல்படும் தாங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்ட நிலையில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெளிநாடுகளுக்கு ஆட்களை கடத்திய சீன நாட்டவர் கைது

கொழும்பு, ஒக். 12

தாய்லாந்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி மியன்மார் மற்றும் லாவோஸுக்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களை அழைத்துச் சென்ற சீன பிரஜை ஒருவர் பத்தரமுல்லையில் மனித கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

59 வயதான சீன பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தில் கணினி தரவு உள்ளீடு மற்றும் வாடிக்கையாளர் சேவை நிறுவனங்களில் வேலை வழங்குவதாக தெரிவித்த இலங்கையர்கள் பலரிடமிருந்து பல கோடி ரூபாயை பெற்றுக் கொண்டு இந்த மனித கடத்தலை மேற்கொண்டமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கிடைத்த தகவலுக்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டாரென மனித கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# அமைச்சர் ஜீவன் ஜெனிவா பயணம்

கொழும்பு, ஒக். 12

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஜெனிவாவுக்கு நேற்று பயணமானார்.

உலக நாடுகளின் தொழிற்சங்கங்கள் பங்கேற்கும் சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் ஜெனிவா சென்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்கவும் அமைச்சருடன் பயணமாகினர்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளரையும் இந்தப் பயணத்தில் சந்தித்து அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார். அத்துடன், ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

'மலையகம் - 200' நிகழ்வு தொடர்பாகவும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பொலிஸ் அதிகாரிகள் பலர் இடமாற்றப்பட்டனர்

கொழும்பு, ஒக். 12

பிரதி பொலிஸ் மா அதிபர்கள் இருவர் மற்றும் பதில் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூவர் உள்ளிட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் கடந்த 09 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய,

கே. கட்டுபிட்டிய, மேல் மாகாணத்தின் தெற்கு பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து போக்குவரத்து மற்றும் சமிக்ஞை பிரிவுக்கு பொறுப்பான பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதி பொலிஸ் மா அதிபர் ஜி. எம். எச். பி. சிறிவர்த்தன போக்குவரத்து மற்றும் சமிக்ஞை பிரிவில் இருந்து பொலிஸ் தலைமையகத்தின் பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, பதில் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூவர் மற்றும் கடமைகளை முன்னெடுப்பதற்காக பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவருக்கும் இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எல்பிட்டிய பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் எம். எம். குமாரசிங்க குளியாபிட்டி பிராந்தியத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனிடையே, பிரதி பொலிஸ் மா அதிபர்கள் பதவியின் கடமைகளை முன்னெடுப்பதற்காக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# முகநூல் தொடர்பாக 23,534 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 12

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் முகநூல் தொடர்பில் 23 ஆயிரத்து 534 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கணினி அவசர பதிலளிப்பு அமைப்பின் சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு பொறியியலாளர் சாருக் கெமுனு பொல இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 70 வீதமானவை பெண்களால் மேற்கொள்ளப்பட்டவை. வேலை வாய்ப்பு பெற்று தருவதாக இணைய வழியில் இடம்பெற்ற மோசடிகளே அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன.

மேலும் பிரமிட் கொடுக்கல் வாங்கல் தொடர்பான மோசடிகளும் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளன.

போலியான முகநூல் கணக்கு உருவாக்கியமை, முகநூல் கணக்குகளை ஹேக் செய்தமை உள்ளிட்ட முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதத்தில் மொத்தமாக 3,328 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முகநூல் தொடர்பான முறைப்பாடுகளை 101 என்ற அவசர அழைப்பு இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# காதலியின் அந்தரங்க படங்களை வீட்டு வாசலில் ஒட்டியவர் கைது!

கொழும்பு, ஒக். 12

காதலியின் அந்தரங்க படங்களை பழிவாங்கும் நோக்கத்தில் காதலியின் வீட்டு வாசலில் ஒட்டிய காதலனை கெஸ்பேவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மஹரகம பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 23 வயதுடைய இளைஞர் ஆவார்.

இளைஞனின் வீட்டை சோதித்தபோது அந்தப் பெண்ணின் மேலதிக படங்களும், மடிக்கணினி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

இருவரும் பாடசாலை காலத்தில் நட்புடன் பழகி பின்னர் காதலர்களாகினர் என்றும் இருவரும் நெருக்கமாக இருந்த நேரங்களில் இந்தப் படங்கள் எடுக்கப்பட்டன என்றும் விசாரணைகளில் தெரிய வந்தது.

அண்மைக்காலமாக இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து அந்தப் பெண் அவருடனான உறவை துண்டித்துள்ளார். இதையடுத்தே அந்தப் பெண்ணை பழிவாங்க இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டார் என்றும் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# துப்பாக்கிச் சூடு மூவர் கைது!

கொழும்பு, ஒக். 12

கடந்த 17 ஆம் திகதி கொழும்பு - மாளிகாகந்தை நீதிமன்றம் அருகே நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்துக்கு உதவி புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 சந்தேகநபர்கள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 6 வயது சிறுமியொருவர் உயிரிழந்தார். அவரின் தந்தை காயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மரத்திலிருந்து தவறிவீழ்ந்தவர் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், ஒக். 12

தென்னை மரத்திலிருந்து விழுந்து, நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார்.

புத்தூர் கிழக்கு, புத்தூர் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசலிங்கம் (வயது 65) என்பவரே கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கடந்த 6ஆம் திகதி, தென்னை மரத்தில் சீவல் தொழில் செய்வதற்காக ஏறிய நிலையில் தவறி கீழே விழுந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் அவர் திங்கட்கிழமை உயிரிழந்தார்.

இவரின் மரணம் தொடர்பில், திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஐ)

# பாலின வன்முறைகளை தடுக்க மூன்று சட்டங்கள் அறிமுகமாகும்

## சிறுவர், மகளிர் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஒக். 12

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நாட்டில் ஆண், பெண் பாலினம் சார்ந்த வன்முறைகளை தடுப்பதற்கான மிக முக்கியமான 3 சட்டங்களை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.**

பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியிருக்கும் இதேநேரம், 10 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் பெண்கள் பாதுகாப்புக்கான மத்தியஸ்தானங்களை நிர்மாணிப்பதற்கும் திட்டமிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், பெண்களின் பிரச்னைகளை அறிவிப்பதற்காக தற்போதும் 24 மணித்தியாலங்கள் இயங்கும் 1938 என்ற தொடர்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் விட்டுச் செல்லப்படும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக “கவுலுவ” என்ற வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

பெண்களின் சுகாதார பாதுகாப்பு மிக முக்கியமானது என்ற வகையில், அதற்காக பயன்படுத்தப்படும் பெண்களுக்கான சனிட்டரி துவாய்களின் வரியை



குறைக்கும் முயற்சிகளில் அமைச்சு தலையீடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேபோல் ஆண்,பெண் பாலினம் சார்ந்த வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும், ஆண்,பெண் பாலின சமத்துவச் சட்டம், பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுச் சட்டம், பெண்கள் வலுவூட்டலுக்கான சட்டம் ஆகிய முக்கியமான மூன்று சட்டங்களை கொண்டு வருவதற்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஒதுக்கீடுகள் ஊடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதோடு, அடுத்த ஐந்து வருடங்களில் (2024 - 2028) மேற்படி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்கீழ் இளம் பெண்கள், விதவைகள், சிறைச்சாலையிலிருக்கும் பெண்கள், தோட்ட தொழில் செய்யும் பெண்கள், குறைந்த வருமானம் பெரும் நகர பிரதேசங்களை சேர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் ஆகியேரை வலுவூட்டும் வகையில் சுய தொழில் முறைகள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதேபோல் 10 மாவட்டங்களை உள்ளடக்கி பெண்களுக்கான பாதுகாப்பு மத்தியஸ்தானங்கள் உருவாக்கப்படவுள்ளதோடு, பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சினால் பல்வேறு விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான 45,000 போஷாக்கு கொடுப்பனவு வழங்கபட்டு வரும் நிலையில், 6 மாதங்கள் வரையான கர்ப்ப காலத்திலும் பாலூட்டும் 4 மாதங்களிலுமாக 10 மாதங்களுக்கு அந்தச் சலுகையை பெற்றுக்கொள்ள முடியும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# தேர்தல் சட்டத்தை மாற்றியமைத்து வங்குரோத்து நிலை ஏற்படுத்த முயற்சி!

## சுதந்திர மக்கள் சபை சாடல்

கொழும்பு, ஒக். 12

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாராளுமன்ற தேர்தல் சட்டத்தை மறுசீரமைத்து நாட்டில் அரசியல் வங்குரோத்து நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. தேர்தலை பிற்போட்டால் எதிர்மறையான தாக்கங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என சுதந்திர மக்கள் சபையின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் பணிமனையில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் தேர்தல் மற்றும் ஜனநாயக மரபுரிமைகளை பாதுகாப்பது பெரும் போராட்டமாக உள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அச்சமடைந்து செய்த சட்ட திருத்தத்தினால் மாகாண சபைத் தேர்தல் பல ஆண்டுகாலமாக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயகம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் முறையற்ற செயல்பாடுகளால் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் எதிர்ப்பு வலுபெற்றுள்ள நிலையில் எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளில் முயற்சிக்கிறது.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தியமைக்கும் வகையில் அமைச்சரவை கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நிச்சயம் நடத்த வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்கு எதிராக அரசாங்கம் செயற்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை முடக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாராளுமன்ற தேர்தல் சட்டத்தை மறுசீரமைத்து நாட்டில் அரசியல் வங்குரோத்து நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. தேர்தலை பிற்போட்டால் எதிர்மறையான தாக்கங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# வரி நிலுவையை செலுத்தாத நிறுவனங்களின் உரிமம் இரத்து!

கொழும்பு, ஒக். 12

போலி ஸ்ரிக்கர்களை பயன்படுத்தி மதுபானத்தை விற்பனை செய்தமை தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ள நிறுவனங்களின் வரி நிலுவை இந்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என்றுவலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வரியை செலுத்த தவறும் நிறுவனங்களின் உரிமம் இரத்து செய்யப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மதுவரித் திணைக்களம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழுவுக்கும் அறியப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# பல்கலைக்கழக விடுதிகளை இரவில் சோதனையிட முடிவு

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஒக். 12

பல்கலைக்கழக விடுதிகளை இரவு வேளைகளில் சோதனைக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விடுதிகளில் இடம்பெறும் பகிடிவதைகளை தடுப்பதே இதன் நோக்கம் என்று அவர் கூறினார்.

விடுதிகளில் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரையான காலப்பகுதியில் அதிகளவிலான பகிடிவதைகள் இடம்பெறுகின்றன என்று கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதற்காக பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரிகள் மற்றும் மாணவ ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அவர்களுக்கு தேவையான போக்குவரத்து மற்றும் வாகன வசதிகள் வழங்கப்படும்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்கான தேசிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக வட்ஸ் அப் இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்றும் இதன்போது இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விரைவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# உணவு விசமானதில் 22 மாணவர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 12

பண்டாரவளையிலுள்ள பாடசாலை ஒன்றின் சுமார் 22 மாணவர்கள் திடீர் சுகயீனமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உணவு விசமானமையே இதற்கு காரணம் என்று தெரிய வருகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் பண்டாரவளை மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# கொழும்பு மாணவர்கள் மத்தியிலும் கண் நோய் வேகமாகப் பரவுகின்றது

கொழும்பு, ஒக். 12

கொழும்பு கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே கண் நோய் வேகமாக பரவி வருவதாக வலயக் கல்வி அலுவலகம் எச்சரித்துள்ளது.

கொழும்பு பிராந்திய பணிப்பாளர் பி. ஆர். தேவபந்து, அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளதுடன் கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால் உடனடியாக மருத்துவ அதிகாரிக்கு தகவல் தெரிவித்து பரிந்துரைகளை பெற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் பாடசாலைகளில் கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால் அவர்களை மற்ற மாணவர்களிடமிருந்து வேறாக்கி தனித்தனியாக வைக்க வேண்டும் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொட்டாஞ்சேனை பகுதி பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் கண் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

# கருத்தரங்கிலிருந்து திரும்பிய மாணவி வாகனம் மோதி பலி!

கொழும்பு, ஒக். 12

அநுராதபுரம் - தலாவ நகரில் நடைபெற்ற புலமைப்பரிசில் கருத்தரங்கில் பங்கேற்ற பின்னர் தனது தாயாருடன் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி விபத்தில் உயிரிழந்தார்.

தலாவ கரகஹவெவ பிரதேசத்தில் வசிக்கும் நிசான்சா நெட்சராணி விமலசேன என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த விபத்தில், சிறுமியின் தாயாரும் பலத்த காயமடைந்து அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து குறித்து எரிபொருள் பவுசர் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தால் குடும்பத்துக்கு ஒரு பசு வழங்கல்!

மட்டக்களப்பு, ஒக். 12

**‘குடும்பத்துக்கு ஒரு பசு’ என்ற திட்டத்தின் கீழ் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு பசு மாடு வழங்கும் திட்டத்தை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் மேற்கொண்டு வருகின்றது.**

**மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், வறுமை நிலையில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.**

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு நேர்த்திக் கடனாக கிடைக்கப் பெற்ற பசுக்களை,

உதவி தேவைப்படும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ‘குடும்பத்துக்கு ஒரு பசு வழங்கல்’ வேலைத்திட்டம் ஊடாக வழங்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக போரதீவுப்பற்று, மண்முனை மேற்கு, ஏறாவூர்பற்று, ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த ஆறு குடும்பங்களுக்கு பசுக்கள் வழங்கப்பட்டன.



ஆலய பரிபாலன சபைத் தலைவர் வண்ணக்கர் இ.மேகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போதே பசுக்கள் வழங்கப்பட்டன.

(ஐ)



# சம்மாந்துறையில் 4 இடங்களில் ஒரேநாளில் யானை தாக்குதல்

அக்கரைப்பற்று, ஒக். 12

சம்மாந்துறையில் நேற்று அதிகாலை 4 இடங்களில் தனியன் யானை ஒன்று தாக்குதல் நடத்தி சேதப்படுத்தியுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சம்மாந்துறை 08 கிராம சேவையாளர் பிரிவில் உள் நுழைந்த காட்டு யானை ஒன்றே தாக்குதல் நடத்தியது.

இதன்போது, பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள், பயன்தரு மரங்கள் பல சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வருடம் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உட்பட்டு 3 நபர்கள் உயிரிழந்ததுடன் முதலை தாக்குதலுக்கு உட்பட்டு ஒருவர் உயிரிழந்தார் என்று சம்மாந்துறை பிரதேச தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தகர் எம் எஸ் எம் அஸாருதீன் தெரிவித்தார்.

(ஐ)

# “வெய்யில் மனிதர்கள்” நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது




கொழும்பு, ஒக். 12

இலங்கை நயினார் சமூக நலக் காப்பகத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் பன்முக ஆளுமை அஷ்ரப் சிஹாப்தீன் மொழிபெயர்த்த “வெய்யில் மனிதர்கள்” எனும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தெமட்டகொட வை. எம். எம். ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

மூத்த எழுத்தாளர் அல் அஸூமத் தலைமையில் இடம்பெற்ற இவ்வறிமுக விழாவில் பிரதம அதிதியாக பலஸ்தீனத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஹிஷாம் அபூ தாஹா கலந்து கொண்டிருந்தார்.

முதன்மை விருந்தினராக சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஏ. பி.எம். அஷ்ரப் கலந்து கொண்டார்.

நூல் தொடர்பான திறனாய்வை சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா, எழுத்தாளர் ஷாகிறா இஸ்ஸதீன், கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பிரபல பலஸ்தீன எழுத்தாளர் கஸ்ஸான் கனஃபானி எழுதிய ‘அர்ரிஜாலு ஃபிஷ்ஷம்ஸ்’ எனும் அரபு மொழி நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பாக இந்த நூல் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# விபுலானந்த மணி மண்டபம் கல்முனையில் திறந்து வைப்பு

காரைதீவு, ஒக். 12

கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் மீளப்புனரமைக்கப்பட்ட விபுலானந்த மணிமண்டபம் நேற்று புதன்கிழமை காலை அதிபர் திருமதி விஜயசாந்தினி நந்தபால தலைமையில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

அதிதிகளாக சிவசிறீ சச்சிதானந்தசிவக்குருக்கள், கல்முனை வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச. சரவணமுத்து, உதவி கல்வி பணிப்பாளர்களான ஆ. சஞ்சீவன் வி. ரி. சகாதேவராஜா கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சமூக செயல்பாட்டாளருமான சந்திர சேகரம் ராஜன் உள்ளிட்டவர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.



முன்னதாக அதிதிகள் பாண்ட் வாத்தியம், தமிழ் இன்னியம் சகிதம் வரவேற்கப்பட்டு பின்னர் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து நாடாவெட்டி விபுலானந்த மணிமண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

இதன்பின்னர், மாணவர்கள் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 5 வருடங்களாக விபுலானந்தா மணி மண்டபம் பழுதடைந்த நிலையில் இருந்த வேளையில், கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனின் வேண்டுகோளுக்கிணங்க லண்டனில் வாழும் பாண்டிருப்பைச் சேர்ந்த திருமதி வனிதா இராஜகுமார் சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் மீளமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஆயிரம் மூக்கு கண்ணாடிகள் கல்முனை றோட்டரி வழங்கும்

காரைதீவு, ஒக். 12

கல்முனை றோட்டரி கழகம், அவுஸ்ரேலிய குளோபல் ஹாண்ட் செயார்டி அமைப்பின் அனுசரணையுடன் ஆயிரம் மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கவுள்ளது.

மூக்கு கண்ணாடிக்கான தேவையிருந்தும் அதனைப் பெற்றுக்கொள்ள வசதியில்லாத வறுமைக்கோட்டின் கீழ் இருக்கின்றவர்களுக்கு இந்த மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படும் என்று கல்முனை றோட்டரி கழக பிரமுகர் றோட்டரியன் மு. சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

ஏற்கனவே கண்ணை பரீட்சித்து மருத்துவ சீட்டை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்த வேலைத்திட்டமானது அடுத்த ஆண்டு ஜனவரி 26, 27ஆம் திகதிகளில் திகதிகளில் கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனையில் அவுஸ்திரேலிய மருத்துவர்களால் கல்முனை மருத்துவர்களின் பங்களிப்புடன் நடைபெறும்.

(ஐ)

# வவுணதீவு விபத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி உயிரிழந்தார்!

மட்டக்களப்பு, ஒக். 12

வவுணதீவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நிலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட உபபொலிஸ் பரிசோதகர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்தில் நீதிமன்ற பிரிவில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த நாவற்குடா பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான உபபொலிஸ் பரிசோதகர் சபேசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர், கடந்த சனிக்கிழமை வவுணதீவிலுள்ள தனது பண்ணைக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, அவருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டதையடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்து விபத்துக்கு உள்ளானார்.

இதனையடுத்து, அவரை மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார்.

# இஸ்ரேல் மக்கள் சகலரையும் அழிக்க விரும்புகிறது ஹமாஸ்

## அந்நாட்டு பிரதமர் சுட்டிக்காட்டு

ஜெருசலேம், ஒக். 10

ஹமாஸ் தீவிரவாதிகளின் தாக்குதலில் மிகவும் கடினமான காலத்தை கடந்து செல்கிறோம். இஸ்ரேல் மக்கள் அனைவரையும் அழிக்க ஹமாஸ் அமைப்பு விரும்புகிறது என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தீவிரவாதிகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இஸ்ரேலின் தெற்கு பகுதி நகரங்களை சேர்ந்த மேயர்களுடன் பிரதமர் நெதன்யாகு காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

ஹமாஸ் தீவிரவாதிகளின் தாக்குதலில் மிகவும் கடினமான காலத்தை கடந்து செல்கிறோம். இஸ்ரேல் மக்கள் அனைவரையும் அழிக்க ஹமாஸ் அமைப்பு விரும்புகிறது.

வீடுகளுக்குள் புகுந்து குழந்தைகள், முதியோரை ஈவு இரக்கமின்றி தீவிரவாதிகள் கொலை செய்துள்ளனர். விடுமுறை கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த அப்பாவி மக்களை கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

மிகக் கொடூர குற்றங்களில் ஈடுபட்ட ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ராணுவ ரீதியாக பதில் அளித்து வருகிறோம். இதன்மூலம் மத்திய கிழக்கில் மாற்றம் ஏற்படும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும்- என்றார்.

பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதலை எதிர்



கொள்ள இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவின் போர்க்கப்பல் மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து இஸ்ரேலுக்கு விரைந்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ராணுவ அதிகாரிகள் கூறும் போது, "அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த போர்ட் கரியர் கப்பல் இஸ்ரேலுக்குச் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த போர் விமான கப்பலில் 5 ஆயிரம் வீரர்கள் உள்ளனர்.

இந்தக் கப்பலில் உள்ள போர் விமானங்கள் எந்தவொரு சூழ்நிலையையும் சமாளிக்கும் திறன் வாய்ந்தவை. தற்போது இந்தக் கப்பல் மத்திய தரைக்கடலில் இருந்து இஸ்ரேல் நோக்கி விரைந்துள்ளது"-என்றனர். (அ)



# யூத சமூக தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது பிரான்ஸ் அரசு!

பாரிஸ், ஒக். 12

பலஸ்தீனிய ஹமாஸ் எதிர்ப்பு குழு மற்றும் இஸ்ரேலியப் படைகள் ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்ட கடுமையான மோதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பிரான்ஸின் பல பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, பாரிஸ் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள வழிபாட்டுத்தலங்கள், யூதப் பாடசாலைகள் மற்றும் நினைவுச்சின்னங்கள் அமைந்துள்ள பகுதிகளைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ், மார்சேய், ஸ்ட்ராஸ்பேர்க் மற்றும் லியோன் ஆகிய இடங்களில் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பமாகும் விடுமுறை மற்றும் யூத புதுவருட ஆரம்பம் காரணமாக வழிபாட்டுத் தலங்களின் பாதுகாப்பு ஏற்கனவே பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸ் உள்விவகார அமைச்சரின் உத்தரவுக்கு அமைய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதல்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில் பிரான்ஸில் உள்ள யூத சமூகத்தின் தளங்களின் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பை உடனடியாக பலப்படுத்துமாறு பிரான்ஸ் உள்விவகார அமைச்சர் கேட்டுள்ளார்.

சுமார் 10 ஆயிரம் இராணுவத்தினர் மற்றும் 4700 பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை எவ்வித அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை எனவும் பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன. (அ)

# மியன்மார் பாதுகாப்பு முகாம் மீது தாக்குதல்!

## 29 பேர் உயிரிழப்பு

நைபிட்டோ, ஒக். 12



இராணுவ ஆட்சி இடம்பெற்று வரும் மியன்மாரில் சீன எல்லைக்கு அருகில் உள்ள பாதுகாப்பு முகாம் மீது நடத்தப்பட்ட பீரங்கித்தாக்குதலில் குழந்தைகள் உட்பட பொதுமக்கள் 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

கியோ என்ற கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இராணுவ அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் குறித்த குழுவுக்கு பொது மக்களின் ஆதரவு காணப்படுகின்றன.

இதேவேளை மியன்மார் இராணுவமும் ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து, எதிர்க்கட்சி மற்றும் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு எதிராக வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்!



ஆப்கானிஸ்தானில் நேற்று புதன்கிழமை காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என அந்நாட்டு நில அதிர்வுக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

குறித்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.1 ஆக பதிவாகியுள்ளது என்றும் குறித்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேதம் தொடர்பில் தகவல் வெளியாகவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்ததோடு 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரெஞ்சு பிரஜைகள் எண்மர் ஹமாஸின் தாக்குதலில் பலி!

## 20 பேரை காணவில்லை!! சிக்குண்டோரை மீட்பதற்கு பாரிஸிலிருந்து விமானம்




பாரிஸ், ஒக். 12

இஸ்ரேல் மீது ஹமாஸ் இயக்கத்தினர் கடந்த சனிக்கிழமை முதல் நடத்திவருகின்ற தாக்குதல்களில் சிக்கிப் பிரெஞ்சுக் குடிமக்கள் எட்டுப் பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்றும் இருபது பேர் காணாமற் போயிருக்கின்றனர் என்றும் பாரிஸில் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள பிந்திய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய அதிகாரிகளது கணக்கெடுப்பின்படி இழப்புகள் பற்றிய முதற்கட்ட விவரங்கள் தெரியவந்துள்ளன என்று கூறியுள்ள வெளிவிவகார அமைச்சர் கத்தரின் கொலொன்னா, இந்த எண்ணிக்கை மிக அதிக அளவில் அதிகரிப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளன என்றும் எச்சரித்துள்ளார்.

அதேசமயம், 14 வயதுச் சிறுவன் உட்படப் பிரெஞ்சுப் பிரஜைகள் பலர் ஹமாஸ் தீவிரவாதிகளால் காஸாப் பகுதிக்குப் பிடித்துச் செல்லப்பட்டிருக்கின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடு திரும்ப முடியாமல் இஸ்ரேலில் சிக்குண்டுள்ள மக்களை ஏற்றி வருவதற்காக விசேட எயார் பிரான்ஸ் விமானம் ஒன்று வியாழக்கிழமை ரெல்அவிவ் செல்லவுள்ளது என்ற தகவலை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ளது.

இதற்கிடையே - ஹமாஸ் தாக்குதல்களில் 14 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருப்பதை அதிபர் ஜோ பைடன் உறுதிப்படுத்தியுள்ளார். சிறைப்பிடிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களில் பல அமெரிக்கப் பிரஜைகளும் அடங்குவர் என்றும் பைடன் இன்று வெள்ளை மாளிகையில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

ஹமாஸின் தாக்குதலை "இரத்த வெறி பிடித்த பிசாசுத்தனம்" என்று வர்ணித்த பைடன், திருப்பித் தாக்குகின்ற கடப்பாடு இஸ்ரேலுக்கு உள்ளது. அமெரிக்கா எப்போதும் இஸ்ரேலின் பக்கமே நிற்கும் எனவும் அறிவித்தார். (அ)

# இலங்கையின் முயற்சிகளுக்கு ஐ. எம். எவ். முழு ஒத்துழைப்பு!

## வாக்குறுதி தரப்பட்டது என்கிறார் செஹான்



கொழும்பு, ஒக். 12

**கடனை நிலைநிறுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தலைமையிலான இலங்கைக் குழுவிற்கும் மொராக்கோவில் உள்ள மராகேச்சில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் - உலக வங்கிக் குழு சந்திப்புகளின் ஓர் அங்கமாக இடம்பெற்ற சந்திப்பின் போதே இது தெரிவிக்கப்பட்டது.

இலங்கை பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தை சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாராட்டியதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஊழலுக்கு எதிரான மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தற்போதைய பணிகள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடியதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 26,272 சுற்றுலாவிகள் 8 நாட்களில் வருகை

கொழும்பு, ஒக். 12

இந்த மாதத்தின் முதல் 8 நாட்களில் 26 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, இந்த மாதத்தின் முதல் 8 நாட்களில் மட்டும் 26 ஆயிரத்து 272 வெளிநாட்டு பிரஜைகள் வருகை தந்துள்ளனர்.

இதில், 6,293 இந்திய பிரஜைகளாவர். ரஷ்யாவில் இருந்து 2 ஆயிரத்து 352 சுற்றுலாப் பயணிகள், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஆயிரத்து 904 சுற்றுலாப் பயணிகளும் சீனாவில் இருந்து ஆயிரத்து 900 சுற்றுலா பயணிகளும், ஜேர்மனியிலிருந்து ஆயிரத்து 679 சுற்றுலா பயணிகளும் அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரத்து 307 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதம் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

செப்ரெம்பரில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 938 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 10 இலட்சத்து 42 ஆயிரத்து 528 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ஐ)

# அசிற் வீச்சு தாக்குதலில் தந்தையும் மகளும் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 12

கொழும்பு - முல்லேரியா - அம்பத்தலையில் அசிற் வீச்சுக்குள்ளான தந்தையும் மகளும் கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தபோதே தந்தை மற்றும் மகள் மீது, வீதியில் நின்ற சந்தேக நபர் அசிற் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளாரென முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் காயமடைந்த மகள் கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவிலும், தந்தை கொழும்பு கண் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# லொத்தர் சபையால் 'மெகா 60' அறிமுகம்!

கொழும்பு, ஒக். 12

தேசிய லொத்தர் சபையின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, புதிய லொத்தர் சீட்டுகளான 'மெகா மில்லியனர்ஸ்' மற்றும் 'மெகா 60' சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

அத்துடன், வெற்றியாளர்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி பணிமனையில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

கொவிசெத 3471 மற்றும் 3477 சீட்டிழுப்புகளின் போது வெற்றியாளர்களாக தெரிவாக அதுருகிரிய எம்.ஏ. ரசாஞ்சலி பெரோரா (ரூ. 6 கோடியே 12 இலட்சத்து 71 ஆயிரத்து 108) மற்றும் மத்துகம கே. சமிந்த ஜெயவிக்ரம (ரூ. 6 கோடியே 5 இலட்சத்து 3 ஆயிரத்து 72) ஆகியோருக்கு காசோலை வழங்கப்பட்டது.

# பாராளுமன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு திட்டம்!

## ஒருபோதும் இடமளியோம் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, ஒக். 12

பாராளுமன்றத் தேர்தலை பிற்போடும் நோக்கத்துடன் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அமைச்சரவை பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளாரெனத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம்செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அந்த கட்சியின் பேச்சாளர் எஸ். எம். மரிக்கார் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

பாராளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் அமைச்சரவையில் யோசனை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களை பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு செயல்படுகின்றார். பாராளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் அரசமைப்பில் மாற்றங்கள் அவசியமாகும். அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேவைக்கேற்ப தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. இதற்குள் சிக்கி எவரும் தமது அரசியல் எதிர்காலத்தை கேள்விக்கு உள்ளாக்கி விடாதீர்கள். தற்போது பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக களமிறங்க முடியாது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியும்.

எனவே, இதன் ஊடாக பஸில் ராஜபக்ஷவை நெருக்கடிக்கு உள்ளாக்கி பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு வேட்பாளராவதே ரணிலின் திட்டமாகும். இதேபோன்று இதனை இலக்காகக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் யாப்பை மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் அவர் முன்னெடுத்து வருகின்றார். அவர் எவ்வாறான தந்திரங்களை முன்னெடுத்தாலும் நாம் பாராளுமன்றத்தில் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு இடமளிக்கப் போவதில்லை. எவ்வாறிருப்பினும் அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதி தேர்தலை ஒருபோதும் அவரால் காலம் தாழ்த்த முடியாது. அடுத்த வருடம் ஒகஸ்டில் நிச்சயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

பொதுஜன பெரமுனவில் பலர் எம்முடன் இரகசிய பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் நிச்சயம் அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனு தாக்கல் செய்வர். பகிரங்க ஊடகத்தில் எம்மால் இதனைக் கூற முடியாது. எனினும் பாராளுமன்றத்தில் கேட்டால் கூறுவோம். மக்கள் ஆணையை எவராலும் பலவந்தமாகக் கோர முடியாது - என்றார். (ஐ)

# உயர்தர பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியீடு

கொழும்பு, ஒக். 12

2023 (2024) ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

பல தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை கருத்தில்கொண்டு, எதிர்வரும் நவம்பரில் இடம்பெறவிருந்த 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை, எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சைகள் திணைக்களத்தின் **www. doenets.lk** என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஒக். 12

அஹூங்கல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டியில் பயணித்த நபர் ஒருவரை காரில் வந்த சிலர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் பலப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மழையால் டெங்கு பரவும் அபாயம் 10 நாட்களில் 700 பேர் அடையாளம்!

கொழும்பு, ஒக். 12

நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால், கடந்த சில வாரங்களில் அது குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.

நாடு முழுவதும் குறிப்பாக தென்மேற்கு பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடம் இதுவரையில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த வாரம் 65 ஆயிரத்தை தாண்டியுள்ளதுடன், மேல் மாகாணத்தில் 31 ஆயிரம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் இது வரை 700 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தற்போது நிலவும் மழையுடனான காலநிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழித்து, சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சீனா செல்கிறார் ரணில்

கொழும்பு, ஒக். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயமாக எதிர்வரும் 14ஆம் திகதி சீனா செல்லவுள்ளார்.

இதன்போது சீன அரசாங்கத்துடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடவுள்ளார் என தகவல்கள் வெளியாயுள்ளன.

மேலும் இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்ற உறுப்பினராக அலி சாஹிர் மௌலானா!

கொழும்பு, ஒக். 12

கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் அமைச்சர் நசீர் அகமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக அலி சாஹிர் மௌலானா நேற்று தெரிவு செய்யப்பட்டார்.

இந்தத் தீர்ப்பு அரசியல் கட்சிகளுக்கு ஒரு முக்கியமான முன்னுதாரணமாக அமைவதாக அலி சாஹிர் மௌலானா ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள தனது தொகுதி மக்களுக்கும், இலங்கைக்கும் உண்மையாக பணியாற்றவுள்ளதாக அலி சாஹிர் மௌலானா கூறியுள்ளார். (அ)

# பலஸ்தீனர்கள் எம்மிடம் பாடம் கற்கவேண்டும்!

## கூறுகிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஒக். 12

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே தீவிரமாகப் போர் இடம்பெற்று வரும் நிலையில் உரிமையும் சமாதானமும் பலஸ்தீனத்தில் நிலவ வேண்டும் எனவும், பலஸ்தீனியர்கள் எங்களிடம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று நடைபெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலஸ்தீன - இஸ்ரேல் விவகாரத்தின் போக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் என்ற யதார்த்தத்தை 1978 ஆம் ஆண்டு அங்கு பயிற்சிக்கு சென்றபோதே என்னால் உணர முடிந்தது.

பலஸ்தீன மக்களின் உணர்வுகளையும் ஆழ்மன விருப்பங்களையும் நான் நேரில் கண்டிருக்கின்றேன். அங்கு நான் ஆயுதப்பயிற்சி எடுத்தவேளை அவர்களது போராட்டத்தில்கூட பங்கெடுத்திருக்கிறேன்.

எமது மண்ணிலும் நானிருந்த எமது அன்றைய ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பே கண்காட்சிகளை நடத்தி பலஸ்தீன விடுதலைக்கு பகிரங்க ஆதரவை தெரிவித்திருந்தது.

போர் வெறியர்களாக அவர்கள் போராட புறப்பட்டவர்கள் அல்லர். 'ஒரு கையில் ஒலிவ் மரக்கிளையும் மறு கையில் ஆயுதமும் ஏந்தியுள்ளோம், எது வேண்டும் என்று யசீர் அரபாத் எழுப்பிய கேள்வி சகலரையும் ஈர்த்திருந்தது' ஒலிவ்மரக்கிளை அங்கு சமாதானத்தின் சின்னம்.

அத்தகைய வழிமுறையே சிறந்ததென நானும் கருதியவன். ஆனாலும் அன்றே நான் நினைத்திருந்தேன் அவர்களது பயணத்திலும் மாற்றங்கள் தேவையென்று. பலஸ்தீனத்தை பாடமாக ஏற்று எமது போராட்டத்தை நடத்த வேண்டும் என்று நான் அன்று கருதியதுண்டு.

பலஸ்தீன மக்களும் இன்று எமது போராட்ட படிப்பினைகளை வைத்துப் பயணிக்க வேண்டும். போர் மேகங்கள் அங்கு சூழ்ந்துள்ளன.

எந்த தரப்பும் பொது மக்களை பாதுகாப்பதில் அக்கறை காட்ட வேண்டும். இதே வேளை பாலஸ்தீன மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். நிரந்தர சமாதானம் அங்கு நிலவ வேண்டும்.

மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தமென்ற உரிமம் பலஸ்தீனத்தில் மட்டுமல்ல எங்கும் நிலவ வேண்டும்- என்றார். (அ)

# நாட்டுக்கு தரமற்ற மருந்துகளை கடத்துவதில் அரசும், சுகாதார அமைச்சரும் முதல் புள்ளிகள்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 12

**தற்போதைய அரசாங்கமும், சுகாதார அமைச்சரும், சுகாதார அமைச்சும் நாட்டுக்கு தரமற்ற மருந்துகளை கடத்துவதில் முதல் புள்ளியாக மாறியுள்ளனர் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.**

**மருந்துப் பொருட்கள் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இத்தருணத்தில் தற்போதைய அரசாங்கமும், சுகாதார அமைச்சரும், சுகாதார அமைச்சும் நாட்டுக்கு தரமற்ற மருந்துகளை கடத்துவதில் முதல் புள்ளியாக மாறியுள்ளனர். போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இம்யூனோகுளோபுலின் என்ற அத்தியாவசிய மருந்து வழக்கமான கொள்முதல் முறைகளைப் பின்பற்றாமல் பதிவுமுறை இல்லாது கொண்டு வரப்பட்டுள்ளன.

நாட்டு மக்களை மரணப் படுக்கைக்கு இட்டுச் செல்லும் தரக்குறைவான மருந்துகளை வழங்குவதற்கு தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமும், சுகாதார அமைச்சரும், சுகாதார அமைச்சும் பொறுப்பு கூற வேண்டும்.

கொள்முதல் மற்றும் பதிவு முறையற்ற,தரம் குறைந்த ஐ.ஏ.வி.ஐ.என்ற மருந்துப்பொருட்கள் சட்டவிரோதமாக இந்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு, இந்நாட்டில் பல நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது நேரடியாக நரம்புக்குள் செலுத்தப்படும் ஒரு மருந்து மற்றும் பிரதானமாக நரம்பியல் வலிக்கு பயன்படுத்தப்படுவதோடு, மேலதிகமாக இம்மருந்து மூட்டுகள் மற்றும் இதய நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தொடர்புடைய வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இந்த தரக்குறைவான மருந்து கொடுக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது இது தொடர்பில் நாட்டின் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் தலைமையிலான அரசாங்கத்தின் பதில் என்னவாக இருக்கிறது. அரசாங்கம் நட்பு வட்டார முதலாளித்துவத்தை முதன்மைப்படுத்தி, அரசியல் சூதாட்டங்களை நடத்தி, தேர்தலை நிறுத்தும் அரசியல் மோசடிகளில் ஈடுபட்டு, நாட்டு மக்களை மரணப் படுக்கைக்கு கொண்டு செல்கின்றனர்.

இந்த மோசடிக்கு ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும் ஊழல் மிக்க சுகாதார அமைச்சரை இப்போதே ஜனாதிபதியால் நீக்க முடியும். ஜனாதிபதி அதை செய்ய மாட்டார். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த குற்றச் செயலில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதியை நிலை நாட்டப்படும்-என்றார். (அ)

# இலங்கையின் கல்வி முறைமைகள் சர்வதேச மட்டத்துக்கு மாற்றப்படும்

## யாழ்ப்பாணத்தில் கூறினார் கல்வி அமைச்சர்





யாழ்ப்பாணம், ஒக். 12

"எதிர்காலத்தில் இலங்கையின் கல்வி முறைமைகள் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் கல்வி முறைமைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இலங்கையின் முன்பள்ளிக் கல்வி, பாடசாலைக் கல்வி, தொழிற் பயிற்சிக் கல்வி மற்றும் உயர்கல்வி ஆகிய நான்கு துறைகளும் ஏனைய முன்னேறிய கல்வி முறைகளுக்கு அமைவாக பாடநெறிகள் மற்றும் வளங்களுக்கு இணையாக அபிவிருத்தி செய்யப்படும்.

இதனடிப்படையில் குறித்த நான்கு கல்வித் துறைகளும் சர்வதேச மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும்.

எதிர்காலத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஆசிரியர் கல்விக்காக அர்ப்பணிக்கப்பட்ட கல்விப் பல்கலைக் கழகம் ஒன்று ஸ்தாபிக்கப்படும்.

இதன்மூலம் யாழ். குடாநாட்டின் கேந்திர நிலையமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமையும்.

வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர் பயிலுநர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும். இதன்மூலம், 2027ஆம் ஆண்டுக்குள் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரி ஆசிரியர்களாகப் பயிற்சியுடன் பாடசாலை




வகுப்பறைகளுக்கு அனுப்புவதே எமது எதிர்பார்ப்பு.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் இருந்து முறையான தொழில்சார் பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரந்த வாய்ப்புகள் உருவாக்கப்படும்-என்றார்.

இதன்போது கலாசாலையின் முன்னாள் அதிபர்கள் கௌரவிக்கப்பட்டு நூறாவது ஆண்டு நினைவையொட்டிய 25 ரூபாய் பெறுமதி கொண்ட தபால் முத்திரை ஒன்றும் வெளியீடு செய்துவைக்கப்பட்டது.

அத்துடன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச.லலீசனால் நூறாவது ஆண்டு நூல் ஒன்றும் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உலகக் கிண்ணத் தொடர்:

# இலங்கை அணியை வீழ்த்தியது பாகிஸ்தான்!




ஹைதராபாத், ஒக். 12

நடப்பு உலகக் கிண்ணத்தொடரின் எட்டாவது போட்டியில் இலங்கையை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பாகிஸ்தான் அணி. முகமது ரிஸ்வான் பொறுப்புடன் விளையாடி பாகிஸ்தானை வெற்றி பெற செய்தார். ஹைதராபாத் நகரில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப் பாட்டத்தைத் தெரிவு செய்தது.

50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 344 ரன்கள் எடுத்தது இலங்கை. குஷல் மெண்டிஸ், 77 பந்துகளில் 122 ஓட்டங்கள் எடுத்தார். சதீர சமரவிக்ரம, 99 பந்துகளில் 108 ஓட்டங்கள் எடுத்தார். பதும் நிசங்க, 51 ஓட்டங்கள் எடுத்தார். 345 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பாகிஸ்தான் அணி விரட்டியது.

இமாம்-உல்-ஹக் மற்றும் பாபர் அஸாம் என இருவரும் விரைந்து ஆட்டமிழந்தனர். 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து பாகிஸ்தான் அணி தடுமாறியது. இக்கட்டான அந்த நேரத்தில் அப்துல்லா ஷஃபீக் மற்றும் முகமது ரிஸ்வான் இணைந்து 176 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். அப்துல்லா ஷஃபீக், 103 பந்துகளில் 113 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

பின்னர் வந்த ஷகீல் உடன் இணைந்து 95 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் ரிஸ்வான். ஷகீல், 31 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து துடுப்பெடுத்தாட வந்த இஃப்திகார் உடன் 37 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் ரிஸ்வான். 121 பந்துகளில் 131 ஓட்டங்கள் எடுத்த ரிஸ்வான், இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். 8 பௌண்ட்ரிகள் மற்றும் 3 சிக்ஸர்களை அவர் விளாசி இருந்தார். 48.2 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 345 ஓட்டங்கள் எடுத்து பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி இரண்டு போட்டிகளில் விளையாடி இரண்டிலும் வெற்றி பெற்றுள்ளது.

(ஐ)

## உலகக் கிண்ணத் தொடர்:

# இங்கிலாந்துக்கு முதல் வெற்றி!

தர்மசாலா, ஒக். 12

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 7-வது லீக் போட்டியில் பங்களாதேஷை 137 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து வெற்றி பெற்றுள்ளது.

இமாசலப் பிரதேசத்தின் தர்மசலாவில் இன்று நடந்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது. இதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து அணி வீரர் டேவிட் மலன் 107 பந்துகளில் 5 சிக்ஸர், 16 பௌண்ட்ரிகள் உள்பட 140 ஓட்டங்ககள் எடுத்தார்.

இதேபோல், ஜோ ரூட் 68 பந்துகளில் ஒரு சிக்ஸர், 8 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்கள் சேர்த்தார். பெயர்ஸ்ரோ 52 ஓட்டங்கள் எடுக்க இங்கிலாந்து அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 364 ஓட்டங்கள் குவித்தது. பங்களதேஷ் சார்பில் மெஹிதி ஹசன் 4 விக்கெட்களும், ஷோரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்களும் வீழ்த்தினர்.

365 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் லிட்டன் தாஸ், மூத்த வீரர் முஷ்பிகுர் ரஹிம் தவிர மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். லிட்டன் தாஸ்பொறுப்புடன் ஆடி 76 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதேபோல், முஷ்பிகுர் ரஹிம் 51 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். மற்றவர்களில் ஹிருடோய் அதிகபட்சமாக 39 ஓட்டங்கள் எடுக்க, இதர வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், 48.2 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால், 137 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சார்பில் ரீஸ் டாப்ளே 4 விக்கெட்டும், கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். நடப்பு தொடரில் இங்கிலாந்து அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும். (ஐ)







# பாகிஸ்தான் அணி சாதனை

ஹைதராபாத், ஒக். 12

இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி புதிய வரலாற்று சாதனை படைத் துள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் 8ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தான், இலங்கை அணிகள் நேற்றுமுன்தினம் மோதின. இதில், இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 344 ஓட்டங்களை இலங்கை குவித்தது.

தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 48.2 ஓவர்களில் 345 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக முகமது ரிஸ்வான் 131 (ஆட்டமிழக்காமல்), அப்துல்லா ஷஃபிக் 113 ஓட்டங்கள் எடுத்தனர்.

மேலும், உலகக் கிண்ணத்தின் 48 ஆண்டுகால வரலாற்றில் அதிகபட்ச ஓட்டங்களை துரத்திய அணி என்ற சாதனையை பாகிஸ்தான் அணி படைத்துள்ளது.

# இந்தியாவின் ஷுப்மன் கில் இன்னும் ஒருவாரம் பங்கேற்கார்!




சென்னை, ஒக். 12

இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரரான ஷுப்மன் கில் கடந்த வாரம் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். இதனால் அவர் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில்,ஷுப்மன் கில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவமனையில் இருந்து திரும்பியுள்ளபோதிலும் அவர் உலகக் கிண்ணத் தொடரில் இந்த வாரத்தில் பங்கேற்பதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷுப்மன் கில் இழந்த உடல்தகுதியை பெற குறைந்தது ஒரு வாரம் ஓய்வு எடுக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# மொசாட் VS ஹமாஸ் :

# மத்திய கிழக்கின் போர்வலு மாற்றம் !

# மொசாட்டை ஏமாற்றி ஹமாஸ் அதிரடி!

**ஹமாஸ் கடந்த சனி இஸ்ரேல் மீது இருபதே நிமிடங்களில் 5,000 ராக்கெட்டுகளை வீசி அந்நாட்டை, மட்டுமின்றி உலகையே அதிரச் செய்துள்ளது.**

மொசாட் இஸ்ரேலின் உளவுத்துறை மட்டுமன்றி, உலகின் சிறந்த உளவு அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் மொசாட் ஆகியவற்றையே ஏமாற்றி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி உள்ளது பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பு.

பாலஸ்தீனப் பகுதிகளில் இயங்கி வரும் பல்வேறு ஆயுதக் போராட்டக் குழுக்களில் மிகப் பெரிய அமைப்பே ஹமாஸ். கடந்த சனி இஸ்ரேல் மீது இருபதே நிமிடங்களில் 5,000 ராக்கெட்டுகளை வீசி அந்நாட்டை, மட்டுமின்றி உலகையே அதிரச் செய்துள்ளது ஹமாஸ் அமைப்பு.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உள்பட அந்நாட்டின் முக்கிய நகரங்களில் பல இடங்கள் பற்றி எரிந்தன. ஹமாஸ் தாக்குதலுடன், ஆயுதக் குழுவினரும் இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேலும் பதிலடி தாக்குதலை தொடங்கியுள்ளதால், 2021-ம் ஆண்டுக்குப் பிறகு அங்கே மீண்டும் பெரிய அளவிலான போர் தொடங்கியுள்ளது. அமெரிக்க ஆதரவுடன் அதிநவீன ராணுவத்தை கட்டமைத்துள்ள இஸ்ரேலை அவ்வப்போது நிலைகுலையச் செய்யும் ஹமாஸ் அமைப்பினரின் இத்தாக்குதல் எவராலும் கணிப்பிட முடியாமல் போனது.

### இஸ்ரேல் தனி நாடு உருவாக்கம்:

பத்து மில்லியன் மக்கள் தொகை மட்டுமே கொண்ட ஒரு சிறிய நாடு. இஸ்ரேல் மீது பல்வேறுபட்ட எதிர்மறை கருத்துகள் இருந்த போதிலும் தன்னம்பிக்கைக்கு இந்த நாட்டை விட உலகில் வேறு எந்த நாட்டையும் உதாரணமாக கூற முடியாது.

1948 மே 14இல் இஸ்ரேல் தனி நாடாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் நாட்டின் அதிகாரபூர்வ மொழிகள் ஹீப்ரு மற்றும் அராபி. இஸ்ரேல் நாட்டின் மக்கள் தொகையில் 74 வீதம் பேர் யூதர்கள் மற்ற 20.8 வீதம் பேர் அரேபியர்கள் ஆவர். உலகில் பல படித்த அதிக மேதாவிகள் இங்கு தான் உள்ளனர். உண்மையில் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரம் மிக்கவர்கள் இஸ்ரேல் நாட்டினர் என்றே கூறலாம்.

### மொசாட் உருவான கதை:

பிரிட்டிஷ் அரசு பாலஸ்தீனத்தில் ஆட்சி புரிந்துக் கொண்டிருந்த காலத்தில் அங்கே அதிகமாக வாழ்ந்தவர்கள் அரேபியர்கள். யூதர்களின் எண்ணிக்கை மிக குறைவே. அப்போது இருந்து அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் மறைமுகமாக போர் நடந்துக் கொண்டு தான் இருந்தது.

அரேபியர்கள் தங்கள் நாட்டில் யூதர்கள் வாழ்வதை விரும்பவில்லை. ஆனால் அன்றைய காலக்கட்டத்தில் ஆட்சி புரிந்த பிரிட்டிஷ் அரசு யூதர்கள் எண்ணிக்கை அதிகரிக்க உதவியது. உலகம் முழுவதும் வாழ்ந்த யூதர்கள் ஒரு காலக்கட்டத்தில் இஸ்ரேலை நோக்கி வர துவங்கினர்.

ஜெர்மனி சர்வாதிகாரி ஹிட்லர் ஆட்சியில் நாஜி படையின் மூலம் யூதர்கள் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டனர். அப்போது ஹிட்லரிடமிருந்து யூதர்களை காப்பாற்ற இஸ்ரேல் மக்கள் எந்த அளவு வேண்டுமானாலும் முயற்சி செய்ய தயாராக இருந்தனர். அவர்கள் மிகப் பெரிய செலவில் கப்பல்களை வாங்கினர்.

ஜெர்மனியில் இருந்து இஸ்ரேல் வருவது அந்த சமயத்தில் மிக இக்கட்டான ஒரு சூழலே. ஒரு புறம் நாஜி படைகள் யூதர்களை தேடி கொண்டிருக்க மறுபுறம் பிரிட்டிஷ் அரசும் யூதர்கள் பெரும் அளவில் வந்து குடியேறுவதை விரும்பவில்லை.

இதற்கு பின் உலகில் வாழ்ந்த யூத மக்களை ஒன்றிணைந்து கொண்டு வர வைக்க அமைக்கப்பட்ட ஒரு ரகசிய குழு தான் இந்த உளவு அமைப்பு. இந்த உளவு அமைப்பின் பெயர் மொசாட் லிஅலியா பெட்.

காலமாற்றத்தில் இந்த அமைப்பு மொசாட்டாக வளர்ச்சி அடைந்தது. இஸ்ரேலுக்கும் யூதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்த நினைக்கும் அனைத்து தகவல்களும் மொசாட்டின் தலைமையகத்துக்கு உடனுக்குடன் அறிவிக்கப்படும். உலகின் மிகப் பெரிய உளவு அமைப்புகள் சி.ஐ.ஏ. மற்றும் எம்.ஐ.6 க்கு அடுத்த இடத்தில் மொசாட் உள்ளது.




### சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை

இஸ்ரேல் மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் சிறியதொரு நாடு, ஆனால் ராணுவத்தில் உளவு துறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னோடி இஸ்ரேல் தான்.

உலகில் உள்ள அனைத்து உளவு அமைப்புகளுக்கும் முன்னோடி என்றே கூறப்படுகிறது இந்த இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பு. உலகிலேயே மிக திறமையான மற்றும் அதிபயங்கரமானதாக அனைவராலும் கருதப்படும் உளவு அமைப்பு மொசாட்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை தான் மொசாட். ஆனால் அமெரிக்காவிடம் தான் பயிற்சி பெற்றது மொசாட் ஆனால் இப்போது அமெரிக்கா சி.ஐ.ஏ.வே ஆச்சரியப்படும் அளவிற்கு மொசாட் வளர்ந்து உள்ளது.

இஸ்ரேலுக்கு எதிர்காலத்தில் எதிரி ஆவான் என்று மொசாட் யாரை யாவது எண்ணினால் ஆரம்பத்திலேயே அந்த அமைப்பை அழித்து விடும். 1972ம் ஆண்டு மியூனிச் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இஸ்ரேல் வீரர்கள், பயிற்சியாளர்கள் 11 பேர் பாலஸ்தீன போராளிகளால் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்குக் காரணமான ஒவ்வொருவரையும் பழி வாங்கி விட்டுதான் இஸ்ரேல் அமைதியானது.

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாட்டில் இஸ் ரேல் உளவு அமைப்பு மொசாட் மேற்கொண்ட ரகசிய படுகொலை வேட்டை யின் பெயர் **Operation Wrath of God.**

இஸ்ரேல் மிகச் சிறிய நாடாகவே இருந்த போதிலும் அந்த சிறிய நாட்டை பார்த்து பொருளாதாரத்திலும் மக்கட்தொகையிலும் மிகையாக இருக்கும் மேற்குலக நாடுகள் கூட பயப்படுகிறது என்றால் அதற்கு மிக மிக முக்கிய காரணம் மொசாட்.

இஸ்ரேல் மிகச் சிறிய நாடாக இருந்தாலும் கூட எந்த நேரமும் தன்னை அழிக்க காத்துக் கொண்டிருக்கும் அரபு தேசங்கள் மத்தியில் மிகச் செல்வ செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

### ஹமாஸ் படைப்பலம்:

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பு செயல்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் இஸ்ரேலில் கட்டுப்பாட்டில் இருந்த இந்த காசா தற் போது ஹமாஸ் அமைப்பின் கட்டுப் பாட்டில் உள்ளது. மேலும் இஸ்ரேலை ஹமாஸ் அமைப்பு காசாவில் நுழைய விடாமல் தடுத்து வருகிறது.

இதனால் காசா பகுதியை கைப்பற்ற இஸ்ரேல் முயற் சிக்கும் நிலையில் ஹமாஸ் தடையாக உள்ளது. அத்துடன் ஹமாஸ் அமைப்பை இஸ்ரேல் தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. மேலும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகள் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் தான் கடந்த சனி (7.10.23) திடீரென்று ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தினர். மேலும் பாராசூட்டில் ஹமாஸ் தீவிரவாதிகள் துப்பாக்கியுடன் இஸ்ரேலுக்குள் நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதையடுத்து போர் தொடங்கி உள்ளதாக கூறி இஸ்ரேல் படையினர், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுத்து வருகின்றனர். காசா பகுதிக்குள் நுழைந்து வான்வெளி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தற்போது போர் தீவிரமாக நடந்து வருகிறது. தற்போது வரை இருதரப்பினரையும் சேர்த்து 1300க்கும் அதிகமானவர்கள் பலியாகி உள்ளனர். மேலும் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் தான் போர் உக்கிரமடைய உள்ளது.

அதாவது ராணுவம், விமானப்படை, கப்பற்படையை பொறுத்தமட்டில் இஸ்ரேல் மிகவும் வலுவாக உள்ளது.

இஸ்ரேலில் ராணுவ வீரர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். புதிய தொழில்நுட்பங்களுடன் பல



பாதுகாப்பு அமைப்புகளை இஸ்ரேல் கைவசம் வைத்துள்ளது. நவீன உபகரணங்கள், சிறந்த உளவுத்துறை அமைப்பை இஸ்ரேல் வைத்துள்ளது. அதோடு அதிநவீன போர் விமானங்கள் உள்ளன.

அதாவது ஐடிஎப் எனும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை என்பது தரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படையை ஒருங்கிணைத்துள்ளது. மேலும் இஸ்ரேலை பொறுத்தமட்டில் கட்டாய ராணுவ சேவை என்பது நடைமுறையில் உள்ளது. இதனால் பெரும்பாலான ஆண்கள் ராணுவம், ஆயுத பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். மேலும் உலகில் மிகச்சிறந்ததாக கருதப்படும் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் ‘அயர்ன் டோம் டிபென்ஸ் சிஸ்டம்’ அமைப்பை இஸ்ரேல் வைத்துள்ளது.

### ஏவுகணை பாதுகாப்பு கொண்ட இராணுவம்:

அதேபோல் டேவிட் ஸ்லிங் மற்றும் அரோ போன்ற

(16ம் பக்கம் பார்க்க)

# ரணில் சீனாவுக்கு செல்வது ஏன்?

# ஜேர்மன் பயணம் தோல்வியா?

அ.நிக்ஸன்

சீனாவைக் கடந்து இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கும் விடயத்தில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் முற்படுவதாகத் தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உதவிகளை எந்த வழியிலாவது பெற முற்படுகிறார். அதேநேரம் சீனாவிடமும் இருந்து அதிகளவு நிதியைப் பெறும் முயற்சிகளும் தீவிரமாக இடம்பெறுகின்றன. அமெரிக்கச் செய்தி ஊடகமான புளூம்போர்க் தகவலின் பிரகாரம், ரணில் சீனாவிடம் சென்று உதவிகளைப் பெறுவதைவிடவும் அமெரிக்க, பிரான்ஸ், ஜேர்மன், மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து நிதியுதவிகளைப் பெறுவதே மேல் என்ற தொனி தென்படுகின்றது.

இப் பின்னணியோடுதான் ஐ.எம்.எப் எனப்படும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு வழங்கவிருந்த இரண்டாம் கட்ட நிதியுதவிகளை வழங்க முடியாதென அறிவித்திருக்கலாம் என்ற சந்தேகங்கள் ரணில் அரசாங்கத்திடம் மேலோங்கியுள்ளன.

இலங்கைத்தீவு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த ஆண்டு எந்த ஒரு தேர்தலையும் நடத்த முடியாதென அதிகாரபூர்வமற்ற முறையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.எம்.எப்.பின் நிதி வழங்கல் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை அவதானித்தே தேர்தல் பற்றித் தற்போதைக்குச் சிந்திக்க முடியாதென்ற கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது போல் தெரிவிகிறது.

கொழும்பில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஜே.வி.பி உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடியிருக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் பரிந்துரைகளை அரசியலாக்கி குழப்ப வேண்டாம் என்றும், கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குரிய பொதுப் பொறிமுறை ஒன்றை வகுத்துச் செயற்பட வேண்டுமெனவும் ஐ.எம்.எப் பிரதிநிதிகள் கேட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக அதிகாரபூர்வமாக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐ.எம்.எப் உம் எதுவுமே கூறவில்லை. சந்திப்பு இடம்பெற்றதாக மாத்திரமே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.எம்.எப். உடனான சந்திப்பில் ரணில் அரசாங்கம் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியதுடன் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என ஐ.எம்.எப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்ததாகச் சஜித் பிரேமதாச கூறியிருக்கிறார்.

அதாவது நிலையான அரசாங்கம் ஒன்று அமைய வேண்டிய அவசியத்தை சஜித் வலியுறுத்தியிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டங்களை ஜே.வி.பியும் மறுக்கவில்லை. ஆனால் பரிந்துரைகளைச் செயற்படுத்த நிலையான அரசாங்கம் தேவை என்று ஜே.வி.பி சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஐ.எம்.எப் பிரதிநிதிகளைப் பொறுத்தவரை உள்ளூார் கட்சி அரசியல் போட்டிகளுக்கு இடமளியாமல் பொருளாதார மீட்சிக்கான பொதுப் பொறிமுறை பற்றியே அதிகளவு கவனம் செலுத்தியிருக்கின்றனர்.

குறிப்பாகத் தமது பரிந்துரைகளை



எதிர்க்கட்சிகள் அரசியலாக்கக் கூடாது என்பது ஐஎம்எப் பிரதிநிதிகளின் எதிர்ப்பார்ப்பு.

எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பின் பின்னணியில்தான் இலங்கை தொடர்ந்து ஆபத்தான பொருளாதாரப் பாதையில் சென்று கொண்டிருப்பதாகவே ஐ.எம்.எப் கருதுகின்றது.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஒரு பகுதியாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தின் மீதான சர்வதேச நாணய நிதியத்தின் சமீபத்திய மதிப்பாய்வின் படி இலங்கைத்தீவில் எதுவுமே சரியாக இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

வடக்குக் கிழக்கு உள்ளிட்ட இலங்கைத் தீவு மக்கள் தற்போது பொய்யான பாதுகாப்பு உணர்வை எதிர்கொள்வதாகக் கடன் வழங்கும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் கருதுவதாக த மொனிங் என்ற ஆங்கில செய்தித் தளம் கூறுகிறது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான், விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை மீளாய்வு செய்த ஐ.எம்.எப் பிரதிநிதிகள் இரண்டாவது தவணைக்குரிய நிதியை வழங்குவது பற்றி அறிவிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளனர் என்ற முடிவுக்கு வரலாம்.

வருமானம் ஈட்டும் இலக்குகள் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஆகிய இரண்டு முக்கிய பகுதிகள் குறித்து ஐ.எம்.எப் கவலை வெளியிட்டுள்ளது.

வருமானப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள் ஐ.எம்.எப் உடன் தற்போது நடந்து கொண்டிருக்கும் வேளையில், ரணில் இந்த மாத நடுப் பகுதியில் சீனாவுக்குப் பயணம் செய்வதில் கவனம் செலுத்தியுள்ளார்.

சீனாவிடம் இருந்து சில உறுதியான அர்ப்பணிப்புகளை ரணில் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சீனா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும், இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை வெற்றிகொள்ள சீனா உதவும் எனவும் ரணில் நம்புகிறார் போல் தெரிகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையான 330 மில்லியன் டொலர்கள் வழங்கப்படக்கூடிய நிலைமை இல்லை என்பதை அறிந்த பின்னணியிலேயே ரணில் சீனாவிடம் சரணடைந்திருக்க வேண்டும்.

முதற் கட்ட கணிப்புகளில் இருந்து 15 வீத வருமானம் பற்றாக்குறையாகவுள்ளது. வருமான நோக்கங்களை நிறைவேற்றுவது வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பது குறித்து இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு கூடுதல் கால அவகாசம் தேவைப்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான மூத்த தூதுவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமானத்தில் 12 வீதம் என்ற நோக்கத்தை எட்டுவது மற்றும் அடுத்த ஆண்டு மற்றொரு பற்றாக்குறையைத் தவிர்ப்பது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் சில புதிய வரி சீர்திருத்தங்களை ஐ.எம்.எப் பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் 2019 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வரி குறைப்புகளை மாற்றியமைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் அறிமுகப் படுத்தப்பட்ட வரி சீர்திருத்தங்கள் வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கப் போதுமானதாக இல்லை எனவும் பீட்டர் ப்ரூயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையே அமெரிக்காவுடன் இலங்கையின் நிதி நிலைமை குறித்துப் பேசி மேலும் சில அலோசனைகளைப் பெற முடியுமென ஐ.எம்.எப் நம்புவதாக ரொய்டர் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

ஐ.எம்.எப் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர், ஜனாதிபதி ரணில் செப்ரெட்பர் 26 ஆம் திகதி ஜேர்மனிக்குச் சென்றிருந்தார். அங்கு இடம்பெற்ற 'பேர்லின் குளோபல் உரையாடலில்' ஜனாதிபதி கலந்து கொண்டார்.

ஜேர்மன் ஜனாதிபதி ஓலாஃப் ஷோல்ஸை சந்தித்தார். இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைப் பற்றிப் பேசியதுடன், இலங்கையின் வேலைத் திட்டத்தை விரைவுபடுத்த பரிஸ் கிளப்பின் உதவியைப் பெறுவதற்கு ஜேர்மன் அரசின் ஆதரவை கேட்டிருந்தார்.

ஆனால் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர பரிஸ் கிளப் ஒக்டோபர் மாதக் கடைசி வரை கால அவகாசம் கேட்டுள்ளது.

பரிஸ் கிளப்பின் ஒத்துழைப்பை பெற்று இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர ரணில் ஜேர்மனியில் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை.

ஆனாலும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை அணுகுவது குறித்தும் ரணில் பரிசீலிக்கிறார். இருந்தாலும் அந்த அணுகுமுறைகள் வெற்றியளிக்குமா என்று கூற இயலாது.

இப் பின்புலத்திலேதான் ரணில், இம்மாத நடுப்பகுதியில் சீனாவிற்குப் பயணம் செய்யவுள்ளாதாகத் தெரிகிறது.

ஆனால் இங்கே வேடிக்கை என்னவென்றால் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ரணில் அக்கறை செலுத்தி வரும் நிலையில் அதற்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சிகள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளன.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரால் இந்த மனு செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்குவதில் சீனாவுக்குப் பெரும் பங்களிப்பு உண்டு. அத்துடன் இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தின் நிலைத் தன்மையிலும் சீனா முக்கிய பங்கு வகிக்கிறது.

பலதரப்பு நிதியளிப்பவர்கள் உட்பட இலங்கைக்கான அனைத்து கடன் வழங்குநர்களும் கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என்று சீனா எதிர்பார்க்கிறது. கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் கடன் வழங்குநர்கள் ஏன் இணைய முடியாது என்ற கேள்வியையும் சீனா முன்வைத்திருக்கிறது.

ஆனால் சீனாவைக் கடந்து மேற்கு மற்றும் ஐரோப்பியக் கடன் வழங்குநர்களிடம் இலங்கை வர வேண்டும் என்ற அழுத்தங்கள் கடந்த சில வாரங்களாக அதிகரித்துள்ளதையே அவதானிக்க முடிகிறது. ரணில் கடும் அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் வழக்குத் தொடுத்தமை என்பது பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே என ஹர்சா டி சில்வா கூறுகிறார். குறிப்பாக வங்கிகளில் வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதால் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் பாதிக்கப்படுவார் என்ற வாதத்தை அவர் முன்வைத்திருக்கிறார்.

ஆகவே மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளாக இருக்கலாம் அல்லது இந்தியா சீனாவாக இருக்கலாம் இலங்கைக்குக் கடன் கொடுத்து மீள முடியாத நிலைமைக்குள் கொண்டு செல்கின்றனர் என்பதை மறுக்க முடியாது.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் வங்கிகளில் வட்டி வீதக் குறைப்பும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட சகல சேவைகளுக்குமான வரி அதிகரிப்புகளும் பொது மக்களுக்குப் பாரிய ஆபத்து. ஆனால் இலங்கைத்தீவின் வருமானத்தை அதிகரிப்பதற்கான மாற்றுத் திட்டங்கள் அரசாங்கத்திடமோ எதிர்க் கட்சிகளிடமோ இல்லை. வரி அதிகரிப்புகளைத் தவிர்த்து இலங்கைத்தீவின் வருமானத்தை அதிகரிக்க இனப் பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டும்.

நல்லிணக்கம் ஊடாகவே பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று ஐ.எம்.எப் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் அவ்வப்போது பரிந்துரைத்தபோதும், அதனை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும் என்ற மன நிலை சிங்கள அரசியல் தலைவர்கள் எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதனைப் பகிரங்கப்படுத்தச் சிங்கள ஆங்கில ஊடகங்களும் தயாராக இல்லை என்பதுதான் வேதனை.

(கூர்மை)

# மொசாட் VS ஹமாஸ் :...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை கொண்ட மேம்பட்ட இராணுவ தொழில்நுட்பங்களை இஸ்ரேல் கைவசம் வைத்துள்ளது. கடற்படையை பொறுத்தமட்டில் ஏவுகணை தாங்கும் கப்பல், நீர்மூழ்கி கப்பல் உள்ளிட்டவற்றை இஸ்ரேல் வைத்துள்ளது.

ஆனால் இஸ்ரேலை ஒப்பிடும்போது பாலஸ்தீனத்தின் படைப்பலம் என்பது ஒருங்கிணைந்ததாக இல்லை. காசாவில் ஹமாஸ் படையும், மேற்கு கரைப்பகுதியில் பாலஸ்தீனத்தின் படையும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதில் சில துணை ராணுவப் படைகள் இருந்தாலும் பயிற்சி, தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் பார்த்தால் இஸ்ரேலை ஒப்பிடும்போது பாலஸ்தீனத்தின் படை பின்தங்கி உள்ளது.

இதுதவிர இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுடன் நல்ல உறவை வைத்துள்ளது. அமெரிக்காவும் கூட தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக தான் உள்ளது. பாலஸ்தீனம் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு மேலை நாடுகளின் ஆதரவு இல்லை. குறிப்பிட்ட சில முஸ்லிம் நாடுகள் மட்டுமே பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக உள்ளன.

மேற்கூறிய இந்த விஷயங்களின் அடிப்படையில் பார்த்தால் பாலஸ்தீனத்தை ஒப்பிடும்போது ராணுவ பிரிவில் இஸ்ரேலின் கை ஓங்கி உள்ளது. ஆயினும் இஸ்ரேலின் முக்கிய உளவு அமைப்பை மீறி அவர்கள் தாக்குதல் நடத்தி இருப்பதோடு, இஸ்ரேலின் முக்கிய படைதளபதியான 'நிர்மோத் அலோனியை ஹமாஸ் தீவிரவாதிகள் போரக்கைதியாக பிடித்து வைத்துள்ளனர்.

இவர் தான் காசாவின் கட்டுப்பாட்டு படைப்பகுதித் தலைவராகவும் சில காலம் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இது இஸ்ரேலுக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

**மொசாட் ஏமாற்றி தாக்குதல் நடத்திய ஹமாஸ்:**

ஹமாஸ், இந்தப் பெயர் இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன் அரேபியச் சுருக்கத்தில் இருந்து பெறப்பட்டது. மேற்குக் கரையையும் காசா நிலப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய முயற்சிக்கு எதிரான முதல் பாலஸ்தீன எழுச்சி தொடங்கிய பிறகு 1987-ஆம் ஆண்டில் உருவானது ஹமாஸ். இஸ்ரேலை அழிப்பதே தங்களது நோக்கம் என இதன் சாசனம் கூறுகிறது.

ஹமாஸ் இரு வேறு பணிகளைச் செய்து வருகிறது. ஒன்று இஸ் அட்-டின் அல்-காசம் என்ற தனது ராணுவப் பிரிவின் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது. மற்றொன்று நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பணிகளைச் செய்வது.

**ஹமாஸ் அரசியல் நடவடிக்கைகள்:**

2005-ஆம் ஆண்டில் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் இயக்கம் அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியது. 2006-ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. கூட்டணி அரசிலும் பங்கேற்றது. அதிபர் முகமது அப்பாஸின் ஃபதா இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டு காசாவுக்குள் முடங்கியது.

அதன் பிறகு இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் காசா பகுதியில் ஈடுபட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே அடைபட்டிருக்கும் காசா பகுதிக்குள் ஹமாஸ் இயக்கத்தை தனிமைப்படுத்துவதற்காகவும் தாக்குதல்களைத் நிறுத்தவதற்காகவும் இஸ்ரேல் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**இரண்டாவது பாலஸ்தீன எழுச்சி:**

இரண்டாவது பாலஸ்தீன எழுச்சியின் தொடக்க ஆண்டுகளில் ஹமாஸ் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதல்களை பாலஸ்தீனர்கள் பரவலாக ஆதரித்தனர். அவற்றை தியாக நடவடிக்கைகள் என்று அவர்கள் கருதினார்கள். மேற்குக் கரையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குப் பழிவாங்கப்படுவதாக எண்ணினார்கள்.

2004-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹமாஸ் மதத் தலைவர் ஷேக் அகமது யாசின் மற்றும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த அப்துல் அஜீஸ் அல்-ரேன்டிஸ்ஸி ஆகியோரை ஏவுகணைகள் மூலம் கொன்றது இஸ்ரேல். அதே ஆண்டில் ஃபதா இயக்கத்தின் தலைவர் யாசர் அராஃபத் மரணமடைந்தார்.

அதன்பின் பாலஸ்தீன நிர்வாகத்துக்கு முகமது அப்பாஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். ஹமாஸின் ராக்கெட் தாக்குதல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாகக் கருதக்கூடியவர் அவர்.

**நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் வெற்றி:**

2006-ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. ஃபதா இயக்கத்துக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் அதிகார மோதல் தொடங்கியது.

தேர்தலில் வெற்றிபெற்றிருந்த ஹமாஸ் இயக்கம், அதற்கு முன் பாலஸ்தீன நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்டிருந்த அனைத்து உடன்பாடுகளையும் எதிர்த்தது. இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிப்பது உள்ளிட்டவையும் அவற்றில் அடங்கும்.

இஸ்ரேல் என்றொரு நாட்டை அங்கீரிப்பதாயில்லை. ஆனால் காசா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாலஸ்தீன நாட்டை உருவாக்குவதை ஒப்புக் கொண்டது.

ஹமாஸின் சண்டை, யூதர்களுக்கு எதிரானதல்ல, 'ஸியோனிச ஆக்கிரிப்பாளர்களுக்கு" எதிரானது என்கிறது ஹமாஸின் புதிய ஆவணம். ஆனால் இஸ்ரேல் இதை ஏற்கவில்லை. உலகை ஏமாற்றும் முயற்சி என்று விமர்சித்தது.

**அரசியல் - பொருளாதாரத் தடைகள்:**

ஹமாஸூக்கு எதிராக இஸ்ரேலும் அதற்கு ஆதரவான மேற்கு நாடுகளும் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

2007-ஆம் ஆண்டு காசா நிலப் பகுதியில் இருந்து ஃபதா இயக்கத்துக்கு ஆதரவான படைகளை ஹமாஸ் இயக்கம் வெளியேற்றியது. பதிலடியாக காஸாவின் எல்லைகளில் தடைகளைக் கடுமையாக்கியது இஸ்ரேல். ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவியது. இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

காசா பகுதியில் இருந்து நடத்தப்படும் அனைத்து ராக்கெட் தாக்குதல்களுக்கும் ஹமாஸ் இயக்கமே காரணம் என்கிறது இஸ்ரேல். இதுவரை காசா பகுதிக்குள் மூன்று முறை ராணுவ நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறது.

2014-ஆம் ஆண்டில் இருந்து அவ்வப்போது சண்டைகள் தொடங்குவதும் எகிப்து, கத்தார், ஐ.நா. போன்றவற்றின் தலையீட்டில் நிறுத்தப்படுவதுமாக பலமுறை நடந்திருக்கிறது. முழு அளவிலான போர் எதுவும் வெடிக்கவில்லை.

காசா பகுதியைச் சுற்றி கடுமையான தடைகளை இஸ்ரேல் விதித்திருந்தாலும், ஹமாஸ் இயக்கம் காசாவை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. ராக்கெட்டின் வலிமையையும் அதிகரித்திருக்கிறது. ஃபதா இயக்கத்துடனான அமைதி முயற்சிகளும் தோல்வியடைந்துவிட்டன.

அதே நேரத்தில் காசா பகுதியில் வசிக்கும் சுமார் 20 லட்சம் பாலத்தீன மக்களின் நிலைமை மோசமடைந்திருக்கிறது. பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது. குடிநீர், மின்சாரம், மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. பாரிய அழிவின் விளிம்பில் போருக்கு முகங்கொள்ள அப்பாவி பாலஸ்தீன மக்களும் தள்ளப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.

